# சுமைகள்



'சுமைகள்' இதழ்–7,(சிறப்பிதழ்)பங்குனி,சித்திரை,வைகாசி 1993

RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
SEINE ; FRANCE

## விசாரணை

என் உடைகளைக் களைந்து
நிர்வாணமாய் நிறுத்தினர்.

விலா எலும்புகளை மட்டுமல்ல
என் உடலின்
எல்லா எலும்புகளையும்,
எல்லா நரம்புகளையும்
எண்ணிக் கணக்கெடுத்தனர்.

இரத்த நாளங்கள்
அனைத்தோடும் விளையாடினர்.
குனிய வைத்து என் முதுகின்மேல்
தீக்குச்சிகளை நாட்டினர்.

முப்பத்தி ஐந்துலட்சம் தமிழர்களின்
மீட்பன் நீதானோ
என வினவினானொருவன்.
அவன்பின்னால் வந்தவனோ,
நாற்பது லட்சம் தமிழர்களின்
மீட்பன் நீயோ என்றான்.

இரவுக் காவலுக்கு
எஸ்.எல். ஆரை சுமக்கமுடியாமல்
சுமந்து நின்ற வட்டுக்காய்
என் தலையில்
எட்டிக் குட்டியபடி கேட்டது
தன்னைப்பற்றி ஒரு கவிதை பாடும்படி.

பனங் குற்றிகளைத் தோளில் சுமத்தி
பதுங்குகுழி அமைக்கும்படி
கட்டளை பிறந்தது.

எனக்கான பட்டயம்
என் கண்முன்னாலேயே எழுதப் பட்டது.
என்னவென்று....?
தேசத் துரோகியென்று

— கௌசல்யன் —

# வெளிப்பாடு

நாம் குடிபெயர்ந்த தேசங்களிலாயினும்சரி, எமது தாயகத்திலாயினும் சரி அனேகமான தமிழர்களின் மனங்களில் ''சிங்களவன் பரம எதிரி'' என்ற தவறான புரிந்து கொள்ளலும், ''சிங்களவனைக் கொல்லவேணும்'' என்ற ஓர்மமான தன்மையும் மொத்த சிங்கள மக்களுக்கும் எதிராக வளர்ந்துவிட்டது. அல்லது வளர்க்கப் பட்டுவிட்டது.

சிறீ லங்கா அரசதிகாரத்தில் அன்றுதொட்டு இன்றுவரை அமர்ந்துவந்த அதிகார வர்க்கம் வடக்குக் கிழக்குத் தமிழர்கள், மலையக மக்கள், தமிழ் முஸ்லீம்கள், என்று இலங்கைத்தீவின் சிறுபான்மை மக்களை மட்டுமல்லாது சிங்கள மக்களையும் பல வகைகளில் அடக்கியொடுக்கித்தான் வந்துள்ளது. வருகிறது.

கடந்த காலங்களிலும்சரி, இப்போதும்சரி சிறிலங்கா அரசாட்சியாளர் சிங்கள மக்கள் மத்தியில் தமிழர்களை விரோதிகளாகவும், பகையாளிகளாகவுமே காட்டி வந்துகொண்டிருக்கின்றனர்.

பெரும்பான்மை இனத்தின் பிரதி நிதிகளாய் ஆட்சியதிகாரங்களைக் கைப்பற்றியிருக்கும் ஓர் அதிகார

வர்க்கத் தலைமை ஏனைய சிறுபான்மை இனங்களை அடக்குவது மட்டுமன்றி தனக்குள்ளும் அடக்குமுறைகளைப் பிரயோகிக்குமென்பது நாட்டுக்கு நாடு, காலத்துக்குக் காலம் நிகழ்ந்துகொண்டிருக்கும் ஓர் உண்மை. இந்த அதிகாரத் தலைமை தன்னைச் சார்ந்த பெரும்பான்மை மக்களிடம் தன்னை நீதிமானாய்க் காட்டிக் கொள்ள ஏனைய சிறுபான்மை இனங்களை பகையாளிகளாய் அவர்களுக்குக் காட்டி பிரித்தாள்வதோடு, தன்னைச் சார்ந்த பெரும்பான்மையின மக்களின் நலன்களுக்காகவே தான் அயராது பாடுபடுவதுபோல் பாசாங்கு செய்துவரும். அப்படித் தன்னால் இரு இனங்களிடையேயும் அல்லது, பெரும்பான்மை, சிறுபான்மை இனங்களிடையே வளர்க்கப்பட்ட இனத்துவேசத்தை அல்லது, பகையுணர்வை கொதிநிலையில் வைத்திருந்தால்த்தான் தன்னால் நீண்ட காலம் உயிர் வாழ முடியுமென்பது இந்த அதிகார வர்க்கத்திற்கு நன்றாகவே தெரியும். சிறீலங்கா அரசாசனத்திலிருந்துவருகின்ற அனைத்துச் சிங்கள அரசுகளும் இந்தக் கொதிநிலை மூலோபாயங்களை கையாண்டு வருகின்றன. அதேவேளை தமிழர்களின் நியாயபூர்வமான உரிமைகளுக்கான கோரிக்கைகளை சிங்கள மக்களும். அவர்கள் மத்தியிலுள்ள சமூக நோக்குக் கொண்ட சக்திகளும் அங்கீகரித்து, ஆதரவாய்க் குரல் கொடுத்துமுள்ளனர். இன்றும் கொடுத்து வரு கின்றனர்.

''சிங்களமக்கள் எமது எதிரிகளல்ல; சிறிலங்கா அரசே எமது எதிரி'' என்ற சுலோகத்தை (வெறும் சுலோகமாய் மட்டும்) தூக்கிப் பிடித்திருந்த ஈழ விடுதலை இயக்கங்களிலும்(?) சிங்கள இளைஞர்கள் பலர் பங்காற்றியும், ஆதரவளித்தும் வந்த சம்பவங்களை யாரும் மறுக்க முடியாது.

''அப்பாவித் தமிழர்களை சிறிலங்கா அரசு அனியாயமாகக் கொன்று குவிக்கிறது'' என்று கூச்சல் போட்ட தமிழ் இயக்கங்கள் அப்பாவிச் சிங்கள, முஸ்லிம் மக்களைக்

கொன்று குவித்து சிறி லங்கா அரச கொலைஞர்களைவிட தாம் ஒருபடி மேல் என்று நிரூபித்தனர். இவை எல்லாவற்றிற்கும் மேலாய் கொலைவெறித் தளங்களுக்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல் இந்திய அரசின் இட்ட பணியை முடிக்கும் சம்பளப் படையாய் 1985ஆம் ஆண்டு அனுராதபுரத்தில் 150ற்கும் மேற்பட்ட அப்பாவிச் சிங்கள மக்களை புலிகள் படுகொலை செய்தனர். (அப்பாவிச் சிங்கள மக்கள் மீதான இந்தப் படுகொலைச் சம்பவத்தை படித்த மட்டங்கள்(?)சில நியாயப் படுத்திய வெட்கத்துக்கும், வேதனைக்குமுரிய சம்பவங்களும் உண்டு) புலிகளைத் தவிர ஏனைய இயக்கங்களும் தத்தமது பங்கிற்காய் சிங்கள மக்களின் உயிர்களைச் சுவைபார்க்கத் தவறவில்லை.

இவை தவிர.......

இந்தியாவைப் பின் தளமாகக் கொண்டு அங்கு தமது தலைமைச் சிம்மாசனங்களை அமைத்திருந்த அனைத்து இயக்கங்களுமே ராமேஸ்வரம், கோவை, கோவளம், கோடியாக்கரை, சேலம், வேதாரணியம், கறுப்பூர் என்று தமது பாசறைகளை அண்மித்த பகுதிகளில் வியாபாரத்திற்காகச் சென்ற முஸ்லிம்களையும், சில தெலுங்கினரையும் சிறி லங்காவின் உளவாளிகளென்றபெயரில் சித்திரவதை செய்து கொன்று, சவுக்கம் காட்டிற்குள்ளும், மணற் கும்பிகளுக்குள்ளும், கடற்கரை ஓரங்களிலும் வறுகிப் புதைத்ததோடு, ஆறுகளிலும் வீசியுள்ளனர். இருளோடு இருளாய் நடைபெற்ற இக்கொலைகள் இன்றுவரை வெளிச்சத்துக்கு வராமலேயே போயுள்ளன.

இப்படி எதிரிகள் யார், நண்பர்கள் யார் என்ற வகுத்தாய்வை எமது தேசத்தின் விடுதலைப் போரின் கடந்த காலங்கள்

கடைப்பிடிக்கத் தவறி விட்டன. நிகழ் காலங்களிலும் இதே நிலைதான்.

இனி வரப்போகும் காலங்களிலாவது தமிழர், தமிழ் முஸ்லிம் மக்களாயிருப்பினும்சரி, மலையக மக்களாயிருப்பினும் சரி, அல்லது சிங்கள மக்களாயினும் சரி எதிரிகள் யார், நண்பர்கள் யார் என்று சரிவர இனங்கண்டு செயற்படுவதே இலங்கைத் தீவின் மொத்த இனங்களுக்குமான எதிர்கால சுபீட்சத்தைக் கண்டடைய நல் வாய்ப்பாய் இருக்கும்.

## மந்திரத்தால் விழாத மாங்கனி.

எந்த மலையாள மாந்திரீகமும், எந்தப் பாற்குளியலும் பிரேமதாஸாவைக் காப்பாற்றாமற் போய்விட்டது. எந்தக் காட்டு தர்பாருக்காக எண்ணற்ற மனித உயிர்களைப் பிரேமதாஸ பலி கொடுத்தாரோ அதேபோன்ற காட்டுதர்பாரின் வேட்டுக்கு தன்னைத் தானே பலி கொடுத்து விட்டார். பிரேமதாஸாவைக் கொன்றது புலிகள்தானென்று பலதரப்புச் செய்திகள் கூறினாலும் வழமை போலவே புலிகள் ''நானவனில்லை'' என்ற பாணியில் மறுத்து விட்டன. அதேவேளை, பல ஊகங்கள் ''அத்துலத்தின் ஆட்கள்தான் இதனைச் செய்திருக்க வேண்டும்'' என்றும் தெரிவிக்கின்றன.

இங்கே: பிரேமாவை அத்துலத்தின் படை கொன்றதா?, அல்லது புலிகள் கொன்றதா என்பதற்கப்பால், இந்தக் கொலைக்குப்பின் தமிழர்களின் பிரச்சனையில் ஏதாவது மாற்றம் ஏற்பட்டுள்ளதா, அல்லது இனிமேல் ஏற்படுமா என்ற கேள்விக்கான விடைதான் இப்போ மக்கள் மத்தியில் எழுந்துள்ள '' விடை தேடும் படலம்''.

பேயின் ஆட்சி முடிந்தால் அதன்பின் இன்னொரு பெரும் பேயின்

ஆட்சி, அல்லது ஓர் குட்டிச்சாத்தானின் ஆட்சி. காலகாலமாய் இலங்கைத்தீவில் ஏற்பட்டு வரும் நிலை இதுதானே. கடந்த காலங்கள் தொடக்கம் இன்றுவரை ஆட்சியிலமர்ந்த சிங்கள அரசுகள் அனைத்துமே சிறுபான்மையின மக்களை குப்புறக் கிடத்தி அவற்றின் மேற்தான் ஆட்சி நடாத்தி வந்திருக்கின்றன. ஒரு அத்துலத் முதலியைக் கொல்வதாலேயோ, அல்லது ஒரு பிறேமதாஸாவைக் கொல்வதாலேயோ இலங்கைச் சிறுபான்மையினரின் பிரச்சனைகள் தீரப் போவதில்லை. பிறேமதாஸாவுக்கு முற்பட்ட காலமாயினும், பிற்பட்ட காலமாயினும் பிறேமதாஸத்தனம் கொண்ட அச்சில் வார்க்கப்பட்டவர்கள்தான் ஆட்சியிலமர்ந்தார்கள், இனியும் அமர்வார்கள். இதிலென்ன வித்தியாசம் நடந்துவிடப் போகிறது?!

இறுக்கமான அரசியல் நகர்வோ, அல்லது அரசியற் தீர்வுத் திட்டங்களோ கைவசமில்லாமல், ஆட்சியாளன் உயிரை மட்டும் பறிப்பதால் எமது பிரச்சனை தீர்ந்துவிடப் போவதில்லை. இதற்கொரு நல்லதோர் உதாரணமாக ராஜீவின் படுகொலை விளங்குகிறதை அவதானிக்கமுடியும். ராஜீவைக் கொன்றதால் இந்தியாவில் அகதிகளாயிருந்த எமது மக்கள்தான் பல இன்னல்களையும், நெருக்கடிகளையும் அனுபவித்தார்கள். இதன் எதிர் விளைவால் இன்றும் இந்தியாவிலிருந்து பாதுகாப்பற்ற பிரதேசங்களுக்கு திருப்பி அனுப்பப் பட்ட அகதிகள், உயிருக்கு உத்தரவாதமில்லாத நிலையில்த்தான் வாழ்கிறார்கள். ஆட்சியாளனின் உயிரில் மட்டும் எமது பிரச்சனைக்கான தீர்வு இல்லையென்பதை எமது கடந்தகாலப் போராட்டமே மிகவும் துல்லியமாய்க் கற்றுத்தந்துள்ளது.

அடுத்து...

இவைகளுக்கெல்லாம் அப்பால் பிறேமாவின் கொலைக்குப் பின் நடந்துள்ள ஓர் சிறிய மாற்றத்தையும் நாம் கவனித்தாகவேண்டும். அண்ணன் தம்பியென சகோதர உறவை வளர்த்திருந்த கொழும்புத் தமிழ்க் குழுக்களின் நிலை இன்று கவலைக்கிடமாகத்தான் உள்ளது. ஆனாலும் அவர்களுக்கு

*நீந்தக் கற்றுக் கொடுக்கத் தேவையில்லை. இனிமேல் ஆட்சிக்கு வருபவர்களை அண்ணனாகவோ, அக்காவாகவோ சுவீகரித்துக் கொண்டால் வாழ்ந்து விடுவார்கள்.*

*சுமைகள்(சிறப்பிதழ்) பங்குனி,சித்திரை,வைகாசி, 1993*

வாசகர்களே!

உங்கள் கைகளில் கனக்கும் இந்த இதழ் சுமைகளின் முதலாம் வருடத்தின் இறுதி இதழாகவும், இரண்டாவது வருடத்தின் தொடக்க இதழாகவும் எம்மிடமுள்ள குறைந்தபட்ச வசதிகளைக் கொண்டு அதிக பக்கங்களுடன் தரப்பட்டுள்ளது. வசதிக்குறைவின் காரணமாய் அச்சமைப்பில், வடிவமைப்பில் நிறைவற்றிருப்பினும், உள்ளடக்கத்தில் நிச்சயம் ஓரளவேனும் நிறைவாயிருக்குமென நம்புகின்றோம். இந்தச் சிறப்பிதழ்(?) தொடர்பாக உங்கள் ஆக்க பூர்வமான விமர்சனங்களை ஆவலோடு எதிர் பார்க்கின்றோம். உங்களது விமர்சனங்கள்தான் சுமைகளை செழுமைப் படுத்தவும், தரமுடையதாக்கவும் உதவும். பிரசுரிப்பதற்கு தரமுடைய ஆக்கங்களையும் உங்களிடமிருந்து கேட்டு நிற்கின்றோம்.

மேலும்,

முதலாவது வருடத்திற்கான சந்தாப்பணத்தை இன்னும் சில வாசகர்கள் அனுப்பிவைக்காமலுள்ளனர். தயவு செய்து அதனை அனுப்பிவைப்பதோடு, இந்த வருடத்துக்கான சந்தாப் பணத்தையும் காலக் கிரமத்தில் அனுப்பி உதவி செய்யவும். அத்தோடு உங்கள் நண்பர்களுக்கும் சுமைகளை அறிமுகம் செய்து வையுங்கள்.

வங்கிக் கணக்கிலக்கம்:- 3201.27.03030SR BANK

முகவரி:- ''Sumaikal''

Almennings Gt-1

4013 Stavanger

NORWAY.

# எதிரொலி எதிரொலி எதிரொலி



முபாரக் அலி

ஏகர்சுண்ட் நகரசபை
அகதிகள் காரியாலய அதிகாரி.

சுமைகள்:– தங்களது பணி கடமைகள்?

முபாரக்:– எமது நகரசபை பொறுப்பேற்றுக்கொள்ளும் அகதிகளுக்கு குடியமர்தலுக்கான ஏற்பாடுகள், (வதிவிடவசதிகள்) அன்றாட அத்தியாவசிய வாழ்க்கைச் செலவுகளுக்கான உதவி ஏற்பாடுகள், நோர்வேஜிய மொழியைப் பயில்வதற்கான ஒழுங்குகள், மாணவப் பிராயத்தினர்க்கு கல்வி பயில்வதற்கான ஒழுங்குகள், பொது சுகாதாரப் பரிசோதனை, பல் வைத்தியப் பரிசோதனை போன்ற ஏற்பாடுகளைச் செய்து கொடுப்பதுடன், இரண்டொரு வருடங்களில் இவர்கள் தங்கள் சொந்தக் காலிலேயே நிற்பதற்கான, வழிவகைகள் உக்கான முயற்சிகளையும், ஒத்தாசைகளையும் வழங்குகின்றோம்.

**சுமைகள்:–** ஒரு அகதியை நகரசபை பொறுப்பேற்றபின் வழங்கும் இந்த உதவிகள் எவ்வளவு காலம் வரை வழங்கப்படும்?

**முபாரக்:–** சாதாரணமாக இந்த அத்தியாவசிய உதவிகள் ஒருவருட காலம்வரை வழங்கப்படும். அதேவேளை இந்தக் காலத்தின் பின் தஞ்சம் கோரிய நபரின் அன்றைய சூழ் நிலைகளையும் கவனத்திற்கொண்டே உதவிகள் வழங்குவதுபற்றி முடிவெடுக்கப்படும். அதாவது, உதாரணத்திற்கு பொது சுகாதாரப் பரிசோதனை, பல் வைத்தியப் பரிசோதனை போன்றவற்றிற்கு வழங்கப்படும் வைத்திய செலவுகளுக்கான உதவிகளை ஒரு வருடத்திற்குள் குறிப்பிட்ட நபர் பெறவேண்டும். இந்தக் கால எல்லைக்குப் பின் (வைத்திய செலவீனங்களை) பெறுவதில் சிக்கல்கள் ஏற்படலாம்.

**சுமைகள்:–** நீங்களொரு வெளி நாட்டவராயிருந்து இப்படியொரு பொறுப்பு வகிக்குமிடத்தில் நீங்கள் எதிர் நோக்கும் நன்மை, தீமைகள்?

**முபாரக்:–** நான் இலங்கையிலிருந்து இந்த நாட்டிற்கு வந்த காலத்திலிருந்து ஓர் வெளி நாட்டவனென்ற வகையில் பல பிரச்சனைகளையும், சிக்கல்களையும் அனுபவத்தில் கண்டுள்ளேன். நானொரு நோர்வேஜியனல்லாத, வெளி நாட்டவனாயிருக்குமிடத்தில் இங்கு தஞ்சம் கோரிவரும் வெளி நாட்டவரின், அல்லது எமது நாட்டவரின் மன நிலைகளை ஓர் நோர்வேஜிய அதிகாரியைவிட இலகுவாகப் புரிந்துகொள்ளக் கூடியதாகவுள்ளது. உதாரணமாக ஒரு நபர் ஓர் உதவியைக் கோரி வரும்பொழுது அவ்வுதவியை சட்டப்படி பெற்றுக்கொள்ள வாய்ப்பின்றியிருக்குமிடத்தில் ஓர் நோர்வேஜிய அதிகாரி அந்தச் சட்டத்தைச் சுட்டிக் காட்டி, குறுகிய விளக்கமளிப்புடன் உதவிக் கோரிக்கையை

நிராகரிக்கலாம். இதனைச் சரியாகப் புரிந்துகொள்ளாத வெளி நாட்டவர் அல்லது, எம்மவர் உடனடி நிராகரிப்பையெண்ணி கோபமோ, கவலையோ கொள்ள வாய்ப்புண்டு. அதேவேளை உதவி கோரியவரின் பிரச்சனையை நீண்ட நேரமெடுத்து, அலசி ஆராய்ந்து, அவரின் மன நிலையைச் சரியாகப் புரிந்துகொண்டு, தன்மையான முறையில் அவருக்குப் பதிலளிப்பதுடன், சட்டப்படி நிராகரிக்கப்பட்ட அவ் உதவியை சட்டபூர்வமான வேறு வழிகளில் பெறமுடியுமாவென சம்பந்தப்பட்டவருக்கு நான் ஆலோசனை வழங்குவதுண்டு. இவ்வகையாகக் கையாள்வதால் பாதகமான பதிலாயிருப்பினும் விண்ணப்பதாரியின் மன நிலை பாதிக்கா வகையிலிருக்கும். தாய் நாடுகளில் பல பிரச்சனை காரணங்களாக இங்கு புலம் பெயர்ந்து தஞ்சம் கோரியவர்களின் மனோ நிலை ஏற்கனவே ஒவ்வொரு வகையில் பாதிப்படைந்தோ, தாக்கமடைந்தோதான் உள்ளது. அவற்றை இங்கு நாம் வழங்கும் பதில் மேலும் பாதிப்படைய வைக்கக் கூடாதல்லவா?! குறிப்பாக எனது பொறுப்பின் கீளுள்ள தமிழர்களைப் பொறுத்தவரை தங்கள் சொந்த மொழியிலேயே தமது பிரச்சனைகளை மனம்விட்டுப்பேசும் வாய்ப்புண்டு. இதனை நான் பெரும் பாய்க்கியமாகக் கருதுகிறேன்.

சுமைகள்:- இங்கு தஞ்சம் கோரி வருபவர்கள் கட்டாயமாக ஓர் குறிப்பிட்டளவு நோர்வேஜிய மொழியைக் கற்க வேண்டுமென்று அகதிகளுக்கான சட்டத்திலேயே உள்ளதல்லவா?

முபாரக்:- இது ஒரு நல்ல விளக்கம் தரக்கூடியதும், தேவையானதுமான கேள்வி. இங்குவந்து தஞ்சம் கோருபவர்கள் 500 மணித்தியானங்கள் (ஆகக் குறைந்தது) நோர்வேஜிய மொழியைப் பயில்வது கடமையாக்கப் பட்டுள்ளது. இங்கு வந்து தஞ்சம் கோரியுள்ளவர்கள் இன் நாட்டின் மொழியறிவை வளர்ப்பதால் பல நன்மைகளைப்

பெற்றுத் தரும். முதலில் நோர்வேஜியர்களுக்கு எமது நிலையை, எமது பிரச்சனைகளைச் சரிவரப் புரிய வைக்க மொழி அறிவு கட்டாயம் தேவை. (இவர்களுடைய மொழி பேசத் தெரிந்தால்த்தானே நாம் இவர்களோடு பேசி உறவாடவோ, கருத்துகளைப் பரிமாறிக் கொள்ளவோ முடியும்) பல நோர்வேஜியர்களுக்கு எமக்கு என்ன பிரச்சனை?. நாம் எதனால் இங்கு வந்தோம் என்பதான, சரியான விளக்கங்கள் தெரியாது. இவை தவிர, முக்கியமாக இன் நாட்டுச் சட்ட திட்டங்களையும், நடைமுறைகளையும் அறியவும், சிக்கல்களைத் தவிர்த்துக் கொள்ளவும் மொழி அறிவு கட்டாயமானதொன்று. அடுத்து இங்கு தொழில் வாய்ப்பைப் பெற்றுக் கொள்வதற்கு கட்டாய மொழியறிவு இருந்தால்த்தான் இலகுவாகும். இங்குள்ள தொழில் நுட்பங்களையும், மற்றும் எமது கல்வித் தராதரங்களையும், விருத்தி செய்து கொள்ளவும் அதிக வாய்ப்புண்டு. சுருக்கமாகக் கூறப்போனால் இன்னாட்டில் மட்டுமல்ல, எமது தேசத்தவர் குடிபெயர்ந்துள்ள அனைத்து நாடுகளிலுமே வசிக்கும் எம்மவர் அந்தந்தத் தேசங்களின் மொழியைப் படித்து, புரிந்துகொள்வதால் எதிர்காலத்தில் எமது சமூகத்திற்கும், நாட்டிற்கும் தேவையான நல்ல நல்ல பல விடையங்கள் கிடைக்க வாய்ப்புண்டு. ஏன்...?! இந்த நோர்வே நாட்டின் கலை, இலக்கியத்திற்கூட எத்தனையோ பல அருமையான படைப்புக்களும், விடயங்களும் உள்ளனவே...! இவற்றிலிருந்தே நாம் எவ்வளவோ பெற்றுக்கொண்டு எமது தேசத்தின் கலை, இலக்கியங்களை நவீன மயப்படுத்தவும், செழுமைப் படுத்தவும் முடியுமே... மேலும் இங்கு எமது உரிமைகள் என்னென்ன என்று அறிந்து கொள்ள எடுக்கும் முயற்சியைப் போன்று இந்தச் சமுதாயத்தில் எமக்குள்ள கடமைகள் என்னென்னவென்பதை அறிந்து செயற்படவும் முயற்சி செய்ய வேண்டும். இதன்மூலம் அன்றாடம் ஏற்படக்கூடிய பிரச்சனைகள் பலவற்றைத் தவிர்த்துக் கொள்ளமுடியும்.

சுமைகள்:- இப் பணியை நீங்கள் ஏற்றுச் செய்வதனால் உங்களுக்கு ஏற்படும் திருப்தி, அதிருப்தி?

முபாரக்:- திருப்தி! அதிருப்தி!! ஒருவர் ஒரு தேவையை விண்ணப்பித்துவிட்டு சாதகமான பதிலை எதிர்பார்த்துக் காத்திருக்கும்போது, உதாரணமாக நாட்டில் இக்கட்டான சூழ் நிலைக்குள் அகப்பட்டிருக்கும் தமது குடும்பத்தினரை இங்கு அழைப்பதற்கு விண்ணப்பித்துவிட்டுக் காத்திருக்கும் சமயத்தில் பதில் கிடைப்பதற்குக் கால தாமதமாகும்போது விண்ணப்பித்தவர் மிகவும் மன நிலை பாதிப்புக்குள்ளாகின்றார். அவருக்குக் கிடைக்கும் சாதகமான பதில், எனக்குக் கிடைப்பது போன்றதோர் பெரும் திருப்தியை ஏற்படுத்துவதுண்டு. இன்னுமோர் திருப்திகரமான சம்பவத்தை இங்கே குறிப்பிடலாமென நினைக்கின்றேன். எனது நகரசபைத் தொகுதியிலுள்ள சில தமிழர்கள் எனது காரியாலயத்துக்கு வந்தபோது கூறினார்கள் ''எமது சொந்த நாட்டிலேயே அரச காரியாலயங்களுக்குச் சென்று எமது தேவைகளை எமது மொழியில்ப் பேசிப் பூர்த்தி செய்ய முடியாத நிலைதான் உள்ளது. ஆனால், பல ஆயிரம் மைல்கள் கடந்து இந்த ஐரோப்பிய நாட்டில் வந்து அரச காரியாலயத்தில் எமது பிரச்சனைகளை எமது தாய்மொழியிலேயே பேசி முடிவு காணுகிறோம்'' என்று.

அதிருப்தி! ஒருவர் ஒரு உதவியைக் கோரி விண்ணப்பித்திருக்கும்போது, சட்டத்தின் பிரகாரம் அவ்வுதவியை வழங்க முடியாத சூழ் நிலை ஏற்படுவதுண்டு. ஆனால், எனக்கு நன்றாகத் தெரியும் அவருக்கு அந்த உதவி தேவையென்று. நான் சட்டத்திற்கு உட்பட்டவனாதலால் அதனை மீற முடியாது. சட்டத்தை அனுசரித்தேதான் செல்லவேண்டும். இந்தச் சூழ் நிலையில் நிராகரிக்கப்படும் அப்படியான சம்பவங்கள் மிகவும் வேதனையைத் தருவதுண்டு.

**சுமைகள்:-** இறுதியாக எமது வாசகர்களுக்கு ஏதாவது கூற விரும்புகிறீர்களா?

**முபாரக்:-** எமது தாய் நாட்டில் பிரச்சனை காரணமாக இங்கு குடி பெயர்ந்துள்ள நாம் இன் நாட்டிலுள்ள சட்ட திட்டங்கள், பழக்க,வழக்கங்கள் போன்றவற்றை உணர்ந்து, சிக்கல்கள் ஏற்படாதவாறு நடந்துகொள்ள முயற்சிக்க வேண்டும். இங்கு எம்மிற் தனியொருவரின் நடவடிக்கைகூட ஒட்டுமொத்தமாக எம் எல்லோரையும் பாதிக்கக் கூடியது. இதனால் இன் நாட்டு மக்கள் மனங்களில் வெளி நாட்டவர் மீதான வெறுப்பு வளர்வதோடு, நிறவாதத்தையும் வளர்த்துவிடக் கூடியதாக அமைந்துவிடும். நிறவாதப் பிரச்சனை வேறுசில ஐரோப்பிய நாடுகளில் மிக மோசமாக நடைபெற்று வருகின்றதென்பதை நாம் அறிவோம். அவற்றோடு ஒப்பிடும்போது நோர்வேயில் நிறவாதம் மிகவும் குறைவென்றேதான் சொல்ல வேண்டும். அது இங்கும் அதிகரிப்பதற்கான சூழ் நிலைகளை எமது தவறான நடவடிக்கைகளும் வழிகோலிக் கொடுத்துவிடும். எனவே எமது மொத்த சமுதாயத்தின் நலங்களையும் கருத்திற் கொண்டு ஒவ்வொரு தனி நபரும் செயற்படுவது நல்லதாகும்.

பல ஆயிரம் மைல்கள் கடல் கடந்து இந்தத் தேசங்களில் நாம் வாழ்ந்தாலும் எமது தாய்மொழி, கலை, கலாச்சாரங்களை மனதிற்கொண்டு செயற்படல் வேண்டும். இவ்விடயங்களில் இந்த நாட்டு அரசால் வழங்கப்படும் உதவிகளை சரியான முறையில் நாம் பயன்படுத்தி அதில் கிடைக்கக்கூடிய நன்மைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும். கலை, கலாச்சாரம், மொழி போன்றவற்றை வளர்க்க நோர்வே அரசு வழங்கும் உதவிகளைப் போன்று அதிக உதவிகளை வேறெந்த நாடுகளும் வளங்குவதில்லை என்பதை நாம் கவனத்திற் கொள்ளவேண்டும்.

# ப ய ண ம்

## கனவானின் கனவுத் தொடர் 3

கல்வாரி மலையை எனக்குத் தெரியாது. அதை நான் கண்டறிந்ததில்லை. கேட்டறிந்ததுண்டு. படித்தறிந்ததுண்டு. நான் கேள்விப் பட்ட கல்வாரி மலையை விடவும் மிகவும் உயர்ந்த செங்குத்தானதோர் மலைத் தொடர் இப்போ என்னெதிரில்.

மலையடிவாரத்தின் கீழ் தன்னந்தனியனாய் நிற்கிறேன். பரந்த வெளியில் உயர்ந்து நிற்கும் பாரிய மலைத் தொடரின் அழகை என்னுள் ரசித்தபடி மிக நீண்ட நேரமாய் நிற்கிறேன். முன்னால் பரந்த வெளியின் புற்கள் படர்ந்த பசுமையின் வனப்பில் என்னைத் தொலைத்தவனாய் மிக நீண்ட நேரமாய், தன்னந்தனியனாய் நிற்கிறேன்.

மிகவும் சோகமாய் அழும் சனாய் இசையொன்று எங்கிருந்தோ வந்து என் செவிகளைத் தொடுகின்றது. வானைத் தொட்டு விடுவதாய் உயர்ந்து நிற்கும் அந்த மலையே உருகி விழும்போல் சனாயின் சோகம் ஒலிக்கிறது. என் இதயத்துள் ஏதோ ஓர் இனம் புரியாத துயர் கவிந்து கொள்கிறது. அந்த இசையில் இளையோடும் சோகம் என்னைக் கொல்வதற்காய் பிரயத்தனம் செய்வது போல் ஓர் பிரமை என்னுட் குடைகிறது.

பலத்த சத்தமாய் பெருங் குரலெடுத்து அழ வேண்டும்போல் ஒரு நெருடல் என்னுள். மீண்டும் மீண்டும் சனாய் இசை என்னை உருகிக் கரைய வைக்க முயற்சிப்பது போல்

மிகவும் வியாகுலமாய் ஓலமிட்டுக் கொண்டிருக்கிறது. நானும் அழுகிறேன். ஆனால் கண்ணீர் வரவில்லை. அழுகிறேன். எனது விம்மல் ஒலியோ தொண்டைக் குழியுட் சிக்கி வெளிவர முடியாமல் தவிக்கிறது. விபரிக்கக் கடினமான ஓர் திணறல் என்னை அமுக்கிக் கொள்கிறது. நான் அழுகிறேன் என்பதோ உண்மை.

இப்போ சனாய் இசை எனக்கு அண்மையில் இருந்து ஒலிப்பதுபோல் உச்சஸ்தாயியில் கேட்கிறது. வெடியொலிகள். மிகத் தொலைவிலிருந்து. ஆனால் மலையில் பட்டுச் சிதறி எதிரொலித்து என்னயல் வெடிப்பது போல் ஒரு பிரமை.

எங்கிருந்து இந்த வெடி ஒலிகள் வருகின்றனவென்று எல்லாத் திசைகளிலும் தேடுகின்றேன். என் கண்களில் தெரியும் எத் திசையிலும் எதுவுமே புலப் படவில்லை. வெட்ட வெளியில் எனதருகில் உயர்ந்து நிற்கும் மலைத் தொடரைவிட வேறெதுவுமே என் கட்புலனில் தென் படவேயில்லை.

இப்போ சனாய் இசை எனக்கு அண்மையில் ஒலிப்பதுபோல் உரத்தும், துல்லியமாகவும் என் காதுகளைத் தொடுகின்றன. அந்தச் சோகத் தொனியைத் தோற்கடிப்பது போல் இப்போ தொடற்சியான வெடியொலிகள். எனது கிராமத்து ஆலயத் திருவிழாக் காலங்களில் தேவ விக்கிரக ஊர்வலத்தின்போது தொடராய் வெடிக்கும் கோர்வை வெடிகளைப் போல் இடைவெளியின்றிக் கேட்கின்றன வெடியொலிகள்.

ஆலயத் திருவிழாக் காலங்களில் வெடிக்கும் கோர்வை வெடியொலிகளுக்கும், இப்போது கேட்கும் வெடியொலிகளுக்கும் என்னால் நிறையவே வித்தியாசங்களை உணர முடிகின்றது. நிச்சயமாக இவைகள் துப்பாக்கி வேட்டொலிகள்தாம். பெரிது சிறிதாய் பல குரல்களில் வேட்டொலிகள். இடையிடையே செவிப் புலனை இரை கேட்கும் பீரங்கிச் சத்தங்களும் அதிர்கின்றன.

கணப் சில நகர்வில் வெகு தொலைவில் எறும்புப் பட்டாளம் போல் சின்னஞ் சிறு உருவங்களாய் பெரியதோர் கூட்டமே என் கண்களில் தெரிகின்றது.


சந்தேகமேயில்லை. அது மனிதக் கூட்டம்தான். சற்று நேரத்திற்கெல்லாம் அந்த மனிதப் பட்டாளம் நான் தரித்து நிற்கும் மலையடிவாரத்தை நோக்கி நெருங்கி விட்டது. தன்னால் முடிந்தவரை சோகத்தைச் சிந்துகிறது சனாய் இசை. கூடவே வெடி ஒலிகளும் போட்டி போடுகின்றன.

மனிதர்கள். பல நாட்கள் பட்டினியால் குடலொட்டி, உடல் காய்ந்த மனிதர்கள். முகம் சுருங்கி, முதுகு கூனி, நடக்கத் திராணியற்று விழுந்து விழுந்து, தள்ளாடித் தள்ளாடி நடந்து வரும் மனிதர்கள். வெறும் எலும்புக் கூட்டில் தோலைப் போர்த்தி விட்டதுபோல் தசை செத்த மனிதர்கள். வயது பேதமற்று குழந்தைகள், முதியோர், பெண்கள், ஆண்கள் என்று நிறைய மனிதர்கள். ஒவ்வொருவர் தோள்களிலும் சுமக்க முடியாப் பாரச் சிலுவைகள். என்னே கொடுமையிது? குழந்தைகள், முதியோர், பெண்கள் என்று எல்லோர் தோள்களிலும் அவரவற்கேயான அளவுகளில் பளு நிறைந்த சிலுவைகள். நடை தெரியாப் பச்சிளம் குழந்தைகளைத் தூக்கிவரும் பெண்களின் தோள்களிலும் ஒவ்வோர் பெரும் சிலுவைகளும், கூடவே ஒவ்வோர் குட்டிச் சிலுவைகளும். தத்தமது சிலுவைகளைச் சுமந்து பெருவாரியாய் நிரை கட்டி மலையை நோக்கி வந்துகொண்டே இருக்கிறார்கள்.

இந்த மலைக் குன்றைத் தேடி மரணப் பயணம் வரும் மனிதர்களை அதட்டி உறுக்கி சத்தவெடி வைத்து வழி நடத்தி வரும் துப்பாக்கி மனிதர்கள். பருத்துக் கொழுத்த அந்த மகமேருத் தோற்றம் கொண்ட துப்பாக்கி மனிதர்களின் முகங்களில் கொலைவெறிப் பெருமிதம் தாண்டவம் ஆடுகிறது.

''இதற்கு மேல் நடக்க முடியாது'' என்பதாய்

சிலுவைகளோடு முகம் குப்புற விழுந்தவர்களை அதே இடத்தில் சல்லடையாய்ச் சரித்தபடி தமது பணி இதுவென்ற இறுமாப்போடு மிடுக்காய் நடந்து வரும் துப்பாக்கி மனிதர்களின் கொலைவெறிக் கர்வத் தோற்றம் மனு வேட்டைப் பேய்களைப்போல் பயம் கட்டுகிறது.



தமக்கும் மேலாய் உயர்ந்து நிற்கும் எல்.எம்.ஜி, ஜி.பி.எம், ஆர்.பி.ஜி, ரி81, இன்னும் தமிழ்ப் பெயர்கள் கொண்ட நவீன யந்திரங்களையும் சுமக்க முடியாமல் சுமந்து வரும் குட்டிக் கொலைஞர்களும் இடையிடையே தென்படுகின்றனர்.

அந்தச் சின்னஞ்சிறு ஆயுதபாணிகளைக் கொலைஞர்கள் என்று வர்ணிப்பதற்கு என் மனதுக்குச் சங்கடமாயிருக்கிறது. அப்பாவித் தனமான அந்தச் சின்னஞ் சிறுசுகளின் முகங்களில் வலுக் கட்டாயமாய் வலிந்து பூசப் பட்ட ஆயுதத் தனமாகத்தான் எனக்குப் படுகிறது. பள்ளிகளில் ஒதுங்க வேண்டியவர்கள் உயிர் பறிக்கும் படு களத்தில் ஈன இரக்கமற்ற பார யந்திரங்களை ஏந்தியபடி

செல்கிறார்கள். அவர்கள் நவீன மயப் படுத்தப் பட்ட கணணி மனிதர்களைப்போல் வேற்றான் கர இயக்கத்தால் இயங்குவதைப் போன்றே எனக்குப் படுகிறது. இந்தப் பிஞ்சு முகங்களில் எப்படி வந்தது இந்தக் குரோதக் கொலைரேகைகள்?!

சிலுவைகளைச் சுமந்து வரும் மனிதக் கூட்டத்திடையே எனக்கு நன்றாகப் பரிச்சயமான முகங்களை, மிகவும் பழக்கமான மனிதர்களையும் காண முடிகிறது. தெளிவற்றதாகத்தான் அவர்களது முகங்கள் தெரிகின்றன. ஆனால் எனக்கு மிகவும் பழக்கமானவர்கள் என்பதை உறுதி செய்ய முடிகிறது.

சிலுவைகளைச் சுமந்து மரணத்தின் உச்சிக்குச் செல்லும் இந்த மனிதர்கள் என்ன பாவம் செய்தார்கள்?! இந்த மண்ணில் பிறந்ததைத் தவிர வேறென்ன பாவம் செய்திருப்பார்கள்?!

இந்தக் கொலைஞர்களை வளர்த்து விட்டதைத் தவிர வேறென்ன தவறைச் செய்திருப்பார்கள்?!

நீதி செத்த மண்ணில் கொலைக் களத்தை நோக்கிய நீண்டதோர் மனித நிரை என்னைக் கடந்து மலை உச்சியை அடைய முயற்சிக்கிறது. செங்குத்தான மலையில் ஏற முடியாது அல்லலுற்றுக் கீழே தொப் தொப்பென்று விழுகின்றனர். குப்புற விழுந்த அப்பாவிச் சனங்களை அரக்கத் தனமாய் பூட்ஸ் கால்களால் ஏறி மிதிக்கின்றனர். ''ஐயோ...'' என்று வேதனையால் அலறுபவர்களின் வாய்களுக்குள் துப்பாக்கிமுனையால் இடித்துத் துன்புறுத்துகின்றனர்.

''என்ன கொடுமையிது...?'' சத்தமாய்க் கூக்குரலிட்டேன். தடியனும், கூடவொரு குட்டி ஆயுதக் காரனும் எனை

நோக்கி கோபமாய் வந்தனர்.

''டேய்... ஆர்ரா பு...ஆண்டி நீ?'' தடியன் உறுமினான். மௌனமாய் நான். எதிர் பாராக் கணத்தில் தடியனின் துப்பாக்கிப் பிடி என் வயிற்றைத் தாக்கியது. ''அம்மா.....'' நிலப் பாறையின் பரப்பில் சாய்ந்தேன். குட்டி ஆயுதக் காரன் என் தலை முடியைப் பிடித்துத் தூக்கி விட்டான். ''எந்த இயக்கமடா நீ'' மீண்டும் தடியனின் உறுமல். எதுவுமில்லை என்பதாய் தலையை அசைத்தேன். ''நீ பொய் சொல்லுறாய்'' குட்டி ஆயுதக் காரனின் துப்பாக்கி முனைக் கத்தி என் கன்னத்தில் கோடு கிழித்தது. புண்ணில் மிளகாய்த் தூள் பட்டது போல் கன்னத்திற் பட்ட காயம் எரிவோடு வலித்தது. சயனட் பூசப்பட்ட கத்தியோ என்று என்னுள் அச்சம் பயமுறுத்தியது. இவர்கள் இனி என்னை என்ன செய்யப் போகிறார்களோ என்ற கேள்விக் குறிக்கு நிச்சயமாக என்னால் பதில் காண முடியவில்லை. பதில் காணக் கூடிய கேள்வியுமல்ல இது. கொல்வார்கள். கொல்வார்கள் என்பது நிச்சயம். ஆனால் எப்படிக் கொல்லப் போகிறார்களென்பதுதான் விநோதமான விடைக்குரியது.

எங்கிருந்து கொண்டு வந்தார்களோ தெரியவில்லை ஓர் கனத்த சிலுவை ஒன்றை இரு தடியர்கள் என் தோளில் சுமத்தினர். பளு தாங்க முடியாமல் மூச்சுத் திணறினேன். யூதச் சேவகரைப் போல் உடை அணிந்த இருவர் (ஆனால் ஈட்டியோ, சவுக்கோ இன்றி துப்பாக்கிகளைப் பிடித்திருந்தனர்) ''மலையை நோக்கி நட'' என்பது போல் சைகை செய்தனர்.

கனத்த சிலுவையைத் தோள் சுமந்து சனக் கூட்டத்தில் சேர்ந்து கொண்டேன். கொடுங்களப் பயணத்தில் சோர்ந்து மயங்கிக் கீழே வீழ்ந்தோர் கால்களில் மிதி படுவதை உணர முடிகிறது என்னால். குழந்தைகளின் அழு குரல்களும் ஓலங்களும், அவலமான மரணக் கூக்குரல்களும், குரல்

தளர்ந்த முதியோரின், தாய்மாரின் ஒப்பாரிச் சத்தங்களும் சிலுவைப் பளுவிலும் பெரும் பளுவாய் என்னைச் சோர்வாக்கியது.

செங் குத்தாய் நிமிர்ந்து நிற்கும் மலை. சிலுவையையும் சுமக்க வேண்டும், மலையிலும் ஏற வேண்டும். எப்படி முடியும்? ஏற்கனவே மலையில் ஏற முயற்சித்து களைத்து வீழ்ந்து கிடக்கும் மனிதக் கும்பம். சில தடவைகள் மலையில் ஏற முயற்சித்தேன். முடியவில்லை என்னால்.

சிலுவையைப் போட்டு விட்டு ஓடினாலென்ன...? மலை உச்சியைத் தொட்டாலும் நேரப் போவது மரணம்தான், சிலுவையைப் போட்டுவிட்டு ஓடினாலும் நேரப் போவது மரணம்தான். இத்தனை குழந்தைகள், தாய்மார், முதியவர்கள் இவர்களை விட நான் மரணத்துக்கு அஞ்சுகிறேனா...? மரணத்தைக் கண்டு என்ன அச்சம்...? ஆனால் அநியாயமான, அபத்தமான சாவை ஏன் தவிர்க்கக் கூடாது...? விழுந்தவன் மீசையில் மண் படவில்லை என்பது போல் என் உள் மனம் இப்படிச் சமாதானம் சொல்லிக் கொள்கிறது. இவர்களை எதிர்த்துப் போராடி ஏன் சாகக் கூடாது...? இடையில் இப்படியோர் கேள்வி என்னுள்.

எனதருகில் எம்.16 ஐச் சுமந்தபடி வந்த ஓர் குட்டி ஆயுதக் காரன் மேல் என் தோளிலிருந்த சிலுவையைத் தொப்பென்று தூக்கிப் போட்டேன். அவன் மேல் விழுந்த சிலுவை தகரத்தில் விழுந்ததைப் போன்ற சத்தத்தை எழுப்பியது. பதறியடித்து விழித்தேன். மணி பத்து என்றது கடிகாரம். தபால்க் காரன் பெட்டிக்குள் கடிதத்தைப் போட்டு விட்டு அடித்து மூடிவிட்டுப் போகிறான் போல்த் தெரிகிறது. அதுதான் தகரச் சத்தம். ''ம்.....கெட்ட கனவைத் தொடர்ந்து வந்த கடிதத்தில் என்ன அணுகுண்டு வந்திருக்கிறதோ....'' கனவு கண்ட களைப்பு என்னைச் சோர்வடைய வைத்துவிட்டதை உணர்ந்தேன்.

அடுத்த கனவில் சந்திப்போம்.

-கனவான்-



*நாங்கள் எதிரிகள்; நிறவாதத்திற்கு.*

## ஒரு கலைஞனின் (குமுறல்) குரல்...

இந்தத் தெரு, அந்த ஒழுங்கை, அதோ... அந்த வீடு, அந்த வீட்டைச் சுற்றியுள்ள மதில், தாமரைப்பூவடிவில் அமைந்த அந்தப் படலை, இந்த நகரம், இந்தப் பூமி எல்லாமே எனக்கும் சொந்தமானதென்று, எனக்கு விபரம் தெரிந்த காலத்திலிருந்து நான் நினைத்துக் கொண்டிருந்தேன்.

எங்கேயோ இருந்து, இடை நடுவில் வந்த இந்தச் சிலர் சொல்கிறார்கள் ''உதெல்லாம் உன்ரதில்ல. உதில உனக்கு இம்மியளவும் சொந்தமில்ல; நீ போ. உந்த வீட்டவிட்டு, உந்தத் தெருவ விட்டு, உந்த மண்ண விட்டு நீ போ. உதெல்லாம் எங்களுக்கும், எங்களுக்கு நெருக்கமானவைக்கும்தான் சொந்தம் நீ போ.'' என்று கூறுகின்றனர்.

நான் நடந்து திரிந்த எனது தெரு, எனக்கு நானே ஆனந்தக் கூத்தாடிய எனது வீடு, எனது இளமைக் கனவுகளை சுமக்கும்

இந்த நகரம், நகரத்தின் சாலைகள்,சோலைகள், எனது வியர்வை புதைந்த இந்தப் பூமி இவையெல்லாம் எனக்குச் சொந்தமில்லையா?!

இவர்கள் யார்...? எனது மண்ணை, எனதுதெருவை, எனது வீட்டை விட்டு வெளியேறும்படி கட்டளை விதிக்க இவர்கள் யார்?

ஓ... இவர்கள் கையில் இப்போது அதிகாரம் இருக்கிறது.

பாவம்... இவர்கள் பாவம். இவர்களுக்காக நான் பரிதாபப் படுவதைத் தவிர வேறென்னதான் செய்யமுடியும்?!

பண்டிகைக் காலங்கள். மண்டபங்களில், தெருக்களில் கூடி நிறைந்திருக்கும் மக்கள். அந்த மக்களை மகிழ்விக்க, சிந்திக்க வைக்க மனிதனாய், மிருகமாய் நான் வேடம் கட்டிக் கூத்தாடிய காலங்கள் போய்விட்டன.

மக்கள் மகிழ்ந்தார்கள். சிந்தித்தார்கள். என்னையும் பாராட்டினார்கள். தமக்கு என்னைத் தேவை என்றார்கள். இந்த மண்ணில் எனது இருப்பு மகத்துவம் என்றார்கள்.

சிந்திக்கத் தொடங்கிவிட்டார்கள், மக்கள் சிந்திக்கத் தொடங்கிவிட்டார்கள் என்று எனக்குள் ஆனந்தக் களிப்படைந்தேன்.

அதிகாரங்களைக் கைப்பற்றிக் கொண்டவர்களோ, மக்களிடமிருந்து என்னை அன்னியப் படுத்துவதற்காக திருட்டுப் புன்னகைகளையும், போலிக் கண்ணீரையும் மக்கள்முன் விதைத்தனர். ''கெட்ட கூத்தாடி இவன்'' என்று வெட்கத்தைக் கக்கத்துக்குள் வைத்துக் கொண்டு வேடங்கட்டி மக்கள்முன் போலிக் கூத்திட்டனர்.

பாவம் மக்கள். இந்த அதிகாரக் கூத்தாடிகளின் பின்னாலுள்ள மிரட்டுச் சட்டங்களுக்குள் சிக்கித் திணறாடுகிறார்கள்.

நான் வெளியேற்றப்பட்டேன். எனது வீட்டைவிட்டு, எனது

தெருவைவிட்டு, எனது நிலப்பரப்பை விட்டு, எனது மக்களைவிட்டு நான் விரட்டப் பட்டேன்.

மக்களுக்கு ''இது'' தேவையென்றேன். ஒன்றும் தெவையில்லை வாயை மூடு என்றார்கள். பின்பு, கரும்புக்குப் பதிலாய் இலுப்பைப் பூவைக் காட்டி மக்களை மந்தைகளைப்போல் ஏமாற்றலாம் என்று நினைத்தார்கள். பாவம் மக்கள். அதிகாரப் பிரயோகங்களுக்கு அஞ்சிய மக்கள் பாவம்.

கடல் கடந்து ''வெளி நாட்டுச்சரக்கு'' என்று எதையெதையெல்லாமோ இறக்கி, மக்களை மயக்கத் திட்டமிட்டார்கள். எல்லாக் காலங்களிலும் மக்கள் ஏமார மாட்டார்கள். மக்களுக்கு விளங்கிவிட்டது. எல்லாமே விளங்கிவிட்டது. எங்கிருந்தோவந்த அந்த சிலருக்கு அதிகாரங்களை வழங்கியது தாம்தானென மக்களுக்கு விளங்கி விட்டது.

இப்போ மீண்டும் என்னைத் தேவை என்கிறார்கள் மக்கள். சிற்பி சொன்னதுபோல் ''பாவம் மக்கள்''.

இந்த அதிகாரர்களுக்குள் இருந்தொருவன் மனச்சாட்சி உறுத்தியதால் ''அவன் நல்லவன், அவனும் தேவை'' என்று எனக்காகக் குரல் கொடுப்பானானால்; நிச்சயம் அவனும் வெளியே தூக்கி வீசப்படுவான். பின் அவன் முகத்தை இழந்தோ,அல்லது முகவரியைத் தொலைத்தோ திரிவான், அல்லது மறைவான்.

இந்த நோய்களுக்கெல்லாம் புழுதி மருந்தாகாது. அறுவைச் சிகிச்சையே தீர்க்கமான மருத்துவம். அறுவைச் சிகிச்சை செய்யும் மருத்துவர்கள் யார்...? வேறு யார்..? மக்களைத் தவிர வேறு யாராக இருக்க முடியும்?! செய்வார்களா????

— கலைஞன் —

# ஐக்கிய நாடுகள் சபையின் புதிய சமாதானத் தூதுவர்

நோர்வே நாட்டின் வெளி நாட்டமைச்சராகக் கடமையாற்றி வந்த தூர்வால்ட் ஸ்தூல்த்தன்போர்க் யுகோஸ்லாவியாவில் ஏற்பட்டுள்ள உள் நாட்டு யுத்தத்தை ஓர் முடிவுக்குக் கொண்டு வருவதற்காக ஐ.நா சபையினால் சமாதானத் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளார். இந்தப் பொறுப்பை முன்பு அமெரிக்காவைச் சேர்ந்த சைரஸ்வான்ஸ் ஏற்று செயற்பட்டு வந்தார். சைரஸ்வான்ஸ் தொடர்ந்து தன்னால் இதனைச் செய்ய முடியாத சூழ் நிலையும், சிக்கல்களும் இருப்பதாகக் கூறி பொறுப்பிலிருந்து விலகிக் கொண்டார். இவரது இந்த இடத்தைப் பூர்த்தி செய்யவே தற்போது ஸ்தூல்த்தன் பேர்க் நியமிக்கப் பட்டுள்ளார்.

ஸ்தூல்த்தன் பேர்க், நோர்வே நாட்டின் முதலமைச்சர் குருகார்லம் புருண்ட் லாண்ட்டின் வலது கையாக விளங்கியவர். உலக அரசியலரங்கில் நன் மதிப்பையும், செல்வாக்கையும் கொண்ட ஸ்தூல்த்தன் பேர்க் ஐ.நா சபையின் சமாதானத் தூதுவராகத் தெரிவு செய்யப் பட்டதைத் தொடர்ந்து நோர்வே முதலமைச்சர் ஆற்றிய உரையில் ''உலக அரசியலரங்கில் ஓர் அரும் பணியைச் செய்வதற்கு எமது நாட்டிற்கு நல்லதோர் சந்தற்பம் கிடைத்துள்ளது. ஸ்தூல்த்தன் பெர்க்கினூடாக எமது தேசத்தின் பங்களிப்பை உலக விவகாரங்களில் சிறப்பான முறையில் வழங்க இது ஓர் அரிய சந்தர்ப்பம்'' என்று தெரிவித்ததுடன், உலக அரசியல் அரங்கில் நோர்வேயின் பங்களிப்புப் பணியைச் செய்யும் சந்தர்ப்பமிதுவென மகிழும் அதே வேளை. தனக்கு உள்




*Thorvald Stoltenberg er ønsket som ny fredsmekler i FN.*

நாட்டு அரசியலில் பல வகைகளில் உறுதுணையாயிருந்த ஸ்தூல்த்தன் பேர்க்கின் உள் நாட்டு அரசியல் விலகல் பெரும் துயரத்தைத் தருவதான வகையிலும், முதலமைச்சரின் பேச்சின் சாராம்சமும், கலங்கிய முகபாவமும் தெருவித்து நின்றன. எது எப்படியிருப்பினும், நோர்வே அரசு தனது ஓர் அதி சிறந்த சேவையாளனை உள் நாட்டு அரசியலிலிருந்து இழந்து ஐ. நா சபைக்கு சமாதானத் தூதுவர் ஒருவரை வழங்கி உள்ளது.

— ஆதித்தன் —

## வாழ்க்கைச் சுழல் வட்டம்.



சக்கரத்தில்
எல்லோரும் சுற்றி சுழன்று வருகிற
இந்த நகர இயந்திரத்தில்
சந்தோசத்தையும்
மற்றவை யாவையும் வாங்கிட
ஊதியம் பெறுகிறார் மக்கள்.

இங்கே யாரையும் யாருக்கும் தெரியாது.
அவசியமுமில்லை.
(அன்றி)இதற்கெல்லாம் அவர்கட்குண்டா நேரம்?

அவர்கள் இந்த சக்கரத்தில் சுற்றி சுற்றிவர வேண்டுமென்றோ
ஆசைப்படுவதெல்லாம் வாங்கிவிட வேண்டுமென்றோ.
ஆதலில் மிகவிரைவாய் மழிந்து பொங்கிடலாம்
ஆனாலும்


குழந்தைகள்யாவையும் தமைத் தாமே பராமரிக்க வேண்டியதே
வயோதிபர் யாவரும் படுக்கையிலே கிடந்திறக்க வேண்டியதே

அன்பு மட்டும் இங்கே பஞ்சம்
இதற்கெல்லாம்
யாருக்குண்டு நேரமிங்கே
யாரறிவார் வாழும் வகை
எதையும் மறக்கவும்
நினைத்தவுடன் மயங்கிச் சுகிக்கவும்
மார்க்கமும் அனுமதியும் இங்குண்டு

இவர்கள்
சிவப்பு பச்சை விளக்குகள்
கண்சிமிட்ட கண்சிமிட்ட
சுற்றிச் சுழன்றன்றோ வருகிறார்கள்

சுற்றி
சுற்றிச் சுழன்று
சுற்றிச் சுற்றி சுழன்று சுழன்று
சுழன்று சுழன்று...சுழன்றன்றோ.....

நோர்வேஜிய மொழியில்:- றொல்வ் ஜாக்கோப்சன்.
தமிழில்:- மைதிலி தவராஜா




# காத்தார் மூத்தார் சந்திப்பு

ழத்தார்:– எங்கயப்பா ஆளக் காணக் கிடைக்குதில்ல....? ங்கயாவது இப்பிடிக் கலியாணக் கிலியாணக் கொண்டாட்டங்களிலதான் காணக் கிடைக்குது. அது சரியப்பா தென்ன கோட் சூட்டெல்லாம் போட்டு அந்தமாதிரிக் லக்குறீர். சத்தியமா நல்லனேரத்தில எம்சியார் வந்ததுபோல டெக்குதப்பா.

ாத்தார்:– சும்மா நக்கல் விடாதேயுங்காணும். உது ஊரில ழுப்த்தெட்டாமாண்டு தச்சதப்பா.

ழத்தார்:–அதுசரி எங்க... ரை கட்டேல்லையே? சப்பாத்தும் தோ கல்லுடைக்கிற வேலைக்குப் போடுறதுபோல டெக்குது.

ாத்தார்:– உந்த விண்ணாணம்தானே வேணாமெங்கிறது. ந்தச் சப்பாத்தின்ர வில தேரியுமே? இங்க வர்ரதுக்கு

முந்தி செட்டித் தெருவில எழு நூறு ரூபாய்க்கு அம்மாண்ட அந்தக்காலக் கடுக்கன் வித்து வாங்கினதுகாணும்.

மூத்தார்:–அதுசரியப்பா...உதென்ன உந்தப் பொக்கட்டுக்க ஏதோ பொம்மலாக் கிடக்கு?

காத்தார்:–அதயேனப்பா கேக்கிறீர்?! முந்தி இந்தக் கோட் சூட் தைக்கேக்க ஆப்தீன் கடயி ரெயிலர் போட்டுத்தந்த ரையின்ர முடிச்சு நேத்தைக்கு அவுண்டு போச்சுதப்பா. கட்டிக் கட்டிப் பாத்தன் சரி வரேல்ல அதுதான் தூக்கிப் பொக்கட்டுக்க வைச்சிட்டன்.

மூத்தார்:– அது சரியப்பா பெடியன் உமக்குக் கலியாணத்துக்குச் சொன்னவனே...?

காத்தார்:– சொல்லாமலேயப்பா வந்திருக்கிறன். மெய்ய காணும் மூத்தார், பெட்ட நோர்வேக்குவந்து மூணு நாலு மாசமாச்சுதாமேயப்பா...?

மூத்தார்:– ஓமாம் மூணு மாசமாச்சுதாம். அதுக்கென்னப்பா?

காத்தார்:– இல்ல ...மூணு மாசமா பெடியனும் பெட்டையும் ஒண்டா இருந்துபோட்டு இப்பதான் கலியாணம் கட்டுகினம். ஒண்ணும் நடக்காமலே இருந்திருக்கும்?

மூத்தார்:– கிணத்துக்க கிடந்த தவள தண்ணி குடிச்சதக் கண்டதாரு, குடியாததக் கண்டதாரு....? இப்ப ஏன் காணும் உமக்கு இந்த ஆராய்ச்சியெல்லாம்? வந்தமா, பிறசன்ற் குடுத்தமா,சாப்பிட்டமா போனமா எண்டில்லாமல்...? நீர் இன்னும் பண்டேக்காலத்திலயே இருக்கிறீர். இங்க இப்ப தாலி கீலி கட்டாமல் ஒண்டாயிருந்து பிள்ளையும் பெறுகுதுகள். நீரென்னடாண்டால்......?!

காத்தார்:– அதுசரி மூத்தார் வந்திருக்கிற பெண்டுகளக் கவனிச்சீரே...?

மூத்தார்:– உமக்கு வேலையே உதுதானே. இவ்வளவு வயசாகியும் இன்னும் காய்ச்சல்ப்பார்வ பாக்கிறீரே.

காத்தார் :– அதுக்காகக் கண்ணப் பொத்திக்கொண்டிருக்கேலுமே?, நான் என்ன சொல்லவந்த்னானெண்டால் இந்தப் பெண்டுகள் இவ்வளவு காஞ்சிபுரமோ, கண்டறியாத சாறியளையும், கிலோக் கணக்கில நகையளையும் எங்கயப்பா மறச்சு வச்சிருந்ததுகள்.

மூத்தார்:– நீரேனப்பா வயித்தெரிச்சல்ப் படுகிறீர்? உம்மட்ட இல்லையெண்டதுக்காக இருக்கிறதுகளப்பாத்து எரியிறதே?

காத்தார்:– நான் எரியேல்லயப்பா... நானும் ஒவ்வொரு நாளும் றோட்டில தமிழ்ப் பெண்டுகளக் காணுறன்,ஆனால்....

மூத்தார்:– சும்மா எல்லா இடமும் நகையளையும், சாறியளையும் காட்டிக்கொண்டு திரியுறதேயப்பா..? அதுகும் இந்தக் குளிருக்க சாறியச் சுத்திக் கட்டினால் நிலம என்ன? இப்பிடி ஏதாவது கலியாணம், பிறந்த நாள்க் கொண்டாட்டங்களிலதானே அதுகளும் தங்களட்ட இருக்கிற நக, நட்டக் காட்டேலும்.

காத்தார்:–ஏங்காணும்! பெடியன் எந்த நேரமும் கையில அஞ்சு காசில்லயெண்டு மூக்கால அழுவான், ஆனால் இப்பிடிப் பெரிசாச் செலவழிச்சு ஆடம்பரமாக் கொண்டாடுறானே? காசெங்காலயப்பா?

மூத்தார்:– மெதுவாகக் கதையுங்காணும். லண்டன் பவுண்ஸ் குறோணரா விழுந்தெழும்புது.

காத்தார்:– விளங்கேல்லயப்பா எனக்கு...?

மூத்தார் :– உமக்கு எதப்பா விளங்கியிருக்கு உது விளங்கிறதுக்கு...? பெடிச்சியட தமயன்மார் மூணுபேர் லண்டனிலயாம். கனகாலமாம் லண்டனுக்குப் போய். இருபதாயிரம் லண்டன் பவுண்ஸ் சீதணமாக் குடுத்திருக்கிறாங்களாமப்பா... பதினொண்டால பெருக்கிப்பாரும் கணக்குத் தெரிஞ்சால். சிலோன் ரூபாயில அறிய வேணுமெண்டால் அதத் திரும்ப ஏழால பெருக்கிப் பாரும். உதுகள விட, கொழும்பில ஒரு வீடு, இங்க ஒரு வீடு. பெடியன் இங்க என்ன வேல செய்யிறாரெண்டது தெரியுந்தானே?!

காத்தார்:– லண்டனிலயிருந்து தமயன்மாரொருதரும் கலியாணத்துக்கு வரேல்லயேகாணும்?

மூத்தார்:– இல்லயாம். றிசப்சன் அங்கதானாம்.

காத்தார்:– அது சரியப்பா... எங்கடசனம் முந்தி ஊரில இருக்கேக்கதான் சீதணம் வாங்கிச்சுதுகள், இப்ப இங்க வந்தாப்பிறகும் வாங்கவேணுமே? பொம்பிளயளும் ஆம்பிளயளப்போல இங்க சரி சமனா உழைக்கீனம்தானே...?

மூத்தார்:– நிற்பாட்டும்காணும். ஊரிலயிருந்து இங்க வந்தாப்போல குண்டியிலயிருக்கிற மண்ணத் தட்டுறமாதிரி பழக்க வழக்கங்கள் எல்லாத்தையும் உதறித்தட்டிப்போட்டு வந்திட்டினமெண்டே நீர் நினைக்கிறீர்?! உண்மையில பெடியனுக்குச் சீதணம் வாங்க விருப்பமில்லையாம். எண்டு சனம் சொல்லுது. நான் சொல்லேல்ல. பரீசிலயிருக்கிற பெடியன்ர தமக்கையும், புருசனும்தானாம் இந்தச் சம்மந்தத்த ஒப்பேற்றினவயளாம். கலியாணப் பேச்சுக் கீச்செல்லாம் ரெலிபோனுக்காலதானாம். அவயள்தான் சீதணம்

சீதணமெல்லாம் பேசி முடிச்சவயளாம். இங்க இப்ப பெடிப்பிள்ள சொல்லிக்கொண்டு திரியிறேராம் சீதணம் வாங்கத் தனக்கு விருப்பமில்லத்தான் ஆனால், சீதணம் வாங்கேல்லயண்டால் மாப்பிளயில ஏதாவது குறபாடெண்டு இளக்காரமா நினைச்சுப்போடுவினமாம். அதாலதான் ஒருகொஞ்சச் சீதணம் சும்மா சம்பிரதாயத்துக்காக வாங்கினதாம்.

காத்தார்:- என்னது.....? ஒருகொஞ்சச் சீதணம்.... சும்மா சம்பிரதாயத்துக்காகவோ....? அப்பிடியண்டால் பொடிப்பிள்ளயட உண்மையான வில எங்கயோ கிடக்கெண்டிறீர்...?

மூத்தார்:- சரி...சரியப்பா சத்தம்போட்டுக் கதையாதேயும் பொம்பிள மணவறைக்கு வருகுது.

காத்தார்:- அது சரியப்பா.... சுகன்யா மாதிரித்தான் தான் பொம்பிள இறக்குவனெண்டு பெடியன் சொல்லிக்கொண்டு திரிஞ்சான்....உதென்னப்பா...ஓமக்குச்சியட தங்கச்சிமாதிரி வருகுது பிள்ள...?

மூத்தார்:- யோவ் சும்மாயிரப்பா. அது பிள்ள முந்தி ஊரில நல்ல மொத்தமா கொழுகொழுவெண்டு நல்ல வடிவாத்தான் இருந்ததாம். ஊரில இப்ப சாப்பாட்டுப் பிரச்சனதானே... கொஞ்சம் வாடித்தான் போயிருக்காம். இனிமேல் பழைய நிலைக்கு வந்திடுமாம்.

காத்தார்:- இப்பிடி ஆர் சொன்னது....?

மூத்தார்:- ஊர் சொல்லுதுகாணும். சும்மாகிடவும். என்னப்போட்டு அறுத்துக்கொண்டிருக்கிறீர்.

காத்தார்:- நானொண்டு கேள்விப்பட்டனான் உண்மையே....?

மூத்தார்:- என்னப்பா அது?

காத்தார்:- பெட்டயின்ர வடிவான பாஸ்போட்சைஸ் படமொண்டக் காட்டித்தானாம் பெடியனச் சம்மதிக்க வச்சவயளாம். பிறகு பெடிச்சி இங்க வந்திறங்கின உடன பாத்திட்டு வேணாமெண்டு சொல்லிப்போட்டானாம். வேணாமெண்டால் முன் சீதணமாத் தந்த பத்தாயிரம் பவுண்சையும் உடன வைக்கச்சொல்லிப்போட்டாங்களாம். உவர் பெடிப்பிள்ள எல்லாத்த்யுமெடுத்துச் செலவுசெய்துபோட்டாராம். திருப்பிக்குடுகேலாத்தால கட்டச் சம்மதிச்சவராம்.

மூத்தார்:- நீரொரு ஊர்க்குருவியப்பா. உதெல்லாம் தெரிஞ்சுவச்சுக்கொண்டுதானா என்னப்போட்டுக் கிண்டினனீர்?

காத்தார்:- உது மட்டுமில்லயப்பா. இன்னும் கிடக்கு.

மூத்தார்:- என்னப்பா அது? இரகசியமாச் சொல்லும்.

காத்தார்:- பொம்பிளயின்ர முகத்தப் பாத்தீரே...? எள்ளும் கொள்ளும் வெடிக்குது. ஏன் தெரியுமே? பொடிப்பிள்ள 21பவுணில தாலி கட்டுறதெண்டு சொன்னவராம். பிறகு காய் வெட்டிப்போட்டாராம். வெறும் மஞ்சல்க் கயிறுதான் கட்டப்போறாராம்.

மூத்தார்:-தாலி கட்டுறதெண்டு வந்தாப்பிறகு தங்கத்தில கட்டினலென்ன, மஞ்சல்க் கயித்தில கட்டினாயென்ன தாலி தாலிதானேயப்பா?

காத்தார்:- பிரச்சன தாலி கட்டுறதா, இல்லையா எண்டதில்லயப்பா. தங்கத்தில கட்டுறதா, மஞ்சல்க் கயித்தில கட்டுறதா எண்டதுதான்.

மூத்தார்:- சரியப்பா வாரும் வெளியில பக்கத்தில கிடக்கிற BARக்க போயிருந்து உதப்பற்றிக் கதைப்பம்.

காத்தார்:– என்னப்பா..... தாலியும் கட்டேல்ல, கலியாணம் அரவாசியில போகப்போறனெண்டு நிக்கிறீர்?

மூத்தார்:– எனக்குக் கலியாணத்துக்குச் சொல்லேல்லக் காணும். சும்மா விடுப்புப் பாப்பமெண்டுதான் உதில பின்னால வந்திருக்கிறன்.

காத்தார்:– உமக்கும் சொல்லேல்லயாப்பா....?

மூத்தார்:– ''உமக்கும் சொல்லேல்லயோ...'' எண்டால்? அப்பிடியண்டால் உமக்கும் சொல்லேல்லயே காத்தார்?

காத்தார்:– இல்லையப்பா. நானும் சும்மாதான் வந்தனான்.

மூத்தார்:– முதல்ச் சொன்னீரப்பா ''சொல்லாமலே வந்தனான்''எண்டு

காத்தார்:– அது சும்மா சொன்னனானப்பா. வாரும் போவம்.

(அடுத்த இதழில் காத்தாரும் மூத்தாரும் தமிழ்ச்சங்க விழாவில் சந்திக்கின்றனர்)

- - - - - - - - - -

# மன்னனின் மதியுகம்

றோகலாண்ட் ஈழத் தமிழர் சங்கத்தினால் கொண்டாடப் பட்ட சித்திரை வருடப் பிறப்பு விழாவில் பேர்கன் தமிழ்க் கலைஞர்களால் ''மன்னனின் மதியுகம்'' என்ற நாடகம் மேடையேற்றப் பட்டது.



நீண்ட காலத்தின் பின் அரச உடைகளோடு பார்த்த ஓர் நாடகம். எமது புண்ணிய பூமிக்கு ஒரு தடவை அழைத்துச் சென்று வந்தது. பக்கத்துக் கிராமங்களுக்கு மாட்டுவண்டி கட்டி கச்சான், கடலை முடிச்சுகளுடன் விடியவிடிய நடக்கும் நாட்டுக் கூத்துக்களைப் பார்ப்பதற்காகச் செல்லும் சிறு பிராய நினைவுகள் சிலகணம் மீளவும் வந்து சென்றன.

நகைச் சுவை நாடகம்தான். ஆனாலும், ரசிக்கும்படியான, சிந்தித்துச் சிரிக்கும்படியான நகைச் சுவைகளைக் கொண்டு புனையப் பட்டு, மேடையேற்றப் பட்டிருந்தது. நாடகத்தின் கதையின் சுருக்கம் இதுதான்.

ஓர் தமிழ் மன்னன் (பாண்டியனின் பரம்பரையோ, அல்லது பண்டாரவன்னியனோ, சங்கிலியனின் பரம்பரையோ. ஆனால் தமிழ் மன்னன்.) தற் புகழ்ச்சியை விரும்பும், சர்வாதிகார அரசு கோச்சும் அந்த மன்னனிடம், பெயரளவில் அரசவை,

மந்திரிப் பிரதானிகள், அரசவைப் புலவர் என்று நிறைய இருப்பினும் அனைத்து முடிவுகளும் அவரதானதே. சுருக்கமாகச் சொல்லப் போனால் சுதி சுத்தமான முடியாட்சி(?). அவரை எதிர்த்து எவரும், எதுவும் பேச முடியாது. அப்படி யாராவது மீறினால் சிங்கத்துக்கு இரையாக்கப் படுவார்.

ஏதோ ஓர் பண்டிகையை முன்னிட்டு கவிதைப் போட்டியொன்று அரசவையில் ஏற்பாடு செய்யப் பட்டது. குடிமக்கள், புலவர்கள், பாடகர்கள் என்று பலர் கலந்து கொள்கின்றனர். (தனக்குப் பிடிக்காத கவிதையை வாசித்த புலவனை சிங்கத்துக்குப் பலியிடுகிறான் மன்னன்.) கவிதைப் போட்டி நடந்துகொண்டிருக்கும் சமயத்தில், அரசியார் அந்தப் புரத்துக்கு அழைக்கிறார் என்றதும் சபையை அவமதிக்கிறோமேயென்ற சிந்தனைகூட இல்லாமல் இடை நடுவில் எழுந்து ஓடுகிறார். (கலையுணர்வு மிக்க மன்னன்) (இதிலே ஓர் அபத்தமான ரசனைத் தனம் என்னவெனில்: இந்த நாடகத்தில் எத்தனையோ ரசிக்கும் படியான சம்பவங்களும், நகைச் சுவைகளும் வந்தபோது முகங்களைத் தொங்கப் போட்டுக் கொண்டிருந்த ரசிகப் பெருமக்கள் அரசியார் மன்னனை அந்தப்புரத்துக்கு அழைத்தபோது விழுந்து விழுந்து சிரித்தார்கள். இதனை நினைக்கும் போது எமது மக்களின் ரசனைத் தனத்தைப் பாழாக்கிய தென்னிந்திய வியாபாரச் சினிமாக்களையும், மூன்றாந்தர, கதா நாயகத் தன்மை கொண்ட கலைப் படைப்புக்களையும் எண்ணி மனம் நொந்தது.)

மன்னனின் பேராசை, புகழாசைக்கு இன்னொரு சம்பவம் அழகாகச் சித்தரிக்கப் பட்டது. கவிதைப் போட்டியில் மன்னன் தானும் கலந்துகொள்ள வேண்டும், பரிசு தனக்கே கிடைக்க வேண்டுமென்றும் சூசகமாக, தீர்ப்புக் கூறப் போகும் அவைப் புலவரது காதுகளில் போட்டு வைக்கிறார். அவைப் புலவரோ தனது உயிருக்கும் அஞ்சாமல்

மன்னனுக்கு எதிராக மாற்றுத் தீர்ப்பை வழங்கி, பரிசிலை வேறொரு புலவருக்கு வழங்கி விடுகிறார். கலையவை கலைந்ததும் அவைப்புலவரை நிறுத்தி அவரின் சிரசைக் கொய்யும்படி மன்னன் தளபதிக்குக் கட்டளை இடுகிறான்.



மூன்று காட்சிகளை மட்டுமே கொண்டு தயாரிக்கப் பட்ட இந்த நாடகம் நகைச் சுவையாக உருவாக்கப் பட்டாலும்கூட, எமது தேசத்தின் சமகால ஆட்சியாளர்களின் சர்வாதிகார, தான் தோன்றித் தனங்களை அம்பலத்தில் நிறுத்துவதாய் அமைந்திருந்தது.

நாடகாசிரியர் நகைச்சுவை என்ற ஊடகத்தை மிகவும் அருமையாகவே பயன் படுத்தியுள்ளார். (இந்த நாடுகளில் இருக்கும் தமிழர்களின் சில கழகங்களிலோ, சங்கங்களிலோ; அரசியல் சார்பற்ற கலைப் படைப்புக்களைத்தான் மேடை ஏற்றுவோம், நாம் எந்த இயக்கங்களுக்கும், எந்த அரசுக்கும் சார்பற்றவர்கள் என்று குருட்டுத் தனமானதோர் போலிக் கோசங்களையும், சட்ட திட்டங்களையும் வைத்துப் பூசை செய்து கொண்டிருக்கிறார்கள். இப்படியானவர்களுக்குப் பூச் சுற்றுவதற்கு இந்த நாடக ஆசிரியர் கையாளும் நகைச் சுவை ஊடகம் மிகவும் அருமையான ஒன்றுதான்.)

அடுத்து இந்த நாடகத்தில் தென் மோடி, வட மோடி இராகங்களில் அமைந்த சில பாடல்களையும் இடையிடையே பொருத்தமாகப் புகுத்தியிருந்தது ஓர் வித்தியசமான ரசனையைத் தந்தது. தொடக்கத்திலிருந்து முடிவுவரை நகைச்சுவையாக நகர்ந்துகொண்டிருந்த நாடகம் இறுதியில்

*கல்வியை நாமிழந்தோம்– எங்கள்*
*நாடு மனை யிழந்தோம்...*
*உற்றார் பெற்றார் இழந்தோம்–*
*இன்று திக்கற்று வாழ்கிறோம்*
*நாம்*

*மதி கெட்ட மன்னனினால்–*
*இன்று நாடு சுடு காடையா...*

.................... .................. என்ற தென்மோடி ராகத்திலமைந்த பாடலின் துயர் இளைகள் விழிகளைப் பனிக்க வைத்தன. நாடகத்தை எழுதி நெறிப்படுத்திய யூலியஸ்ும்(நிமால்) இதில் தளபதியாக பங்கேற்று அருமையாக நடித்திருந்தார். ஜோ.ராஜ்குமாரின் மிடுக்கான தோற்றம் மன்னனுக்குரிய சரியான தேர்வாக இருந்தது. அத்தோடு அவரது காத்திரமான நகைச்சுவைப் பாணி அரங்கத்தைப் பூரணமாக வியாபித்திருந்தது.

ஆஸ்த்தான புலவராய் நடித்த மொறின்ராஜின் நடிப்பு அவரது வயதுக்கு மீறியதாய், வியப்பூட்டும் வகையில் இருந்தது. ஆனாலும் அவர் மூக்குக் கண்ணாடியை அணிந்திருந்ததைத் தவிர்த்திருக்கலாம். நகைச்சுவை நாடகமென்பதனால் மூக்குக் கண்ணாடியோடு நடித்தாரோ தெரியவில்லை; ஆயினும் அது கொஞ்சங்கூடப் பொருத்தமற்றதாகத்தான் இருந்தது.

மந்திரி: மக்வீன், வழிப்போக்கர்கள்: மீர்சன்,நிக்சன், பாடகன்: ஜெனா, இளங்கவிஞன்: உமா, சேவகன்: கமல் அனைவருமே தத்தமது பாத்திரங்களைத் திறம்படச் செய்த

போதும், சில குறைகள் இருக்கத்தான் செய்தன. பாடகனாகத் தோன்றி நடித்த ஜெனா வடமோடி ராகத்தில் அமைந்த பாடலை மிகவும் நன்றாகப் பாடியபோதும், பிற்பாட்டுக் குழுவினர்க்கு கொடுக்கும் சமயத்தில் எதுவித ஆட்டமும், அசைவும் இல்லாமல் ஓரிடத்திலேயே நின்றது அந்தப் பாடலின் காட்சிக்குரிய உயிரோட்டத்தைத் தடுத்து நிறுத்தியதாய் தோன்றியது. இவர் திரைக்குப் பின்னால் பாடிய இறுதித் தென்மோடிப் பாடல் நன்றாயிருந்த போதும் இவரது குரல் வளம், உச்சஸ்தாயியில் உயர்த்தி எடுக்கும்போது நாசிக்குள்ச் சென்று சிக்கும் தன்மையதாய்த் தோன்றியது.

அடுத்து, இந்த நாடகத்துக்கு, நாடகாசிரியர் ஏன் ''மன்னனின் மதியுகம்'' என்று தலைப்பு வைத்தாரென்பதுதான் புரியவில்லை.

மேலும், இறுதிக் காட்சிக்கு ஒளியமைப்பில் சிறிது கவனம் செலுத்தியிருந்தால் அக் காட்சி இன்னும் சிறப்பாயிருந்திருக்கும். (இந்த நாடகத்தின் கருவுயிரே அந்த இறுதிக் காட்சிதானே?) அடுத்து எல்லா நிகழ்ச்சிகளிலும் இருக்கும் அரங்கக் குறைபாடுகள் இருக்கத்தான் செய்தன. மண்டபத்தின் பின்னாலுள்ள ஆசனங்களில் இருந்தவர்களுக்கு வசனங்கள் தெளிவாகக் கேட்கவில்லை. (இது நிகழ்ச்சி ஒழுங்காளர்களின் பொறுப்பிலுள்ள விடையம்)

மொத்தத்தில் இந்த நாடகக் குழு பாராட்டுதலுக்குரியது. மணித்தியாலங்களைக் குறோணர்களகக் கணக்குப் பார்க்கும் இந்த ஐரோப்பிய மண்ணில், தமது நேர காலங்களைச் செலவு செய்து இப்படி ஒரு கலைப் படைப்பை வழங்கிய இந்த நாடகக் குழுவினர்க்கு பாராட்டுக்களைத் தெரிவிப்பதோடு, இப்படி வளர்ந்துவரும் இளைய தலைமுறைக் கலைஞர்களைப் புலம் பெயர்ந்த தேசங்களிலுள்ள எமது கழகங்கள், சங்கங்கள், பொது

ஸ்தாபனங்கள் சந்தர்ப்பம் வழங்கி, மக்களுக்கு இவர்களை அறிமுகப் படுத்துவதோடு, ஊக்குவிக்கவும் வேண்டும். தென் இந்தியச் சினிமாக் காரர்களை பல லட்சங்கள் செலவு செய்து இங்கு அழைத்து மூன்றாந்தர நிகழ்ச்சிகள் நடாத்துவோர் இப்படியான, மக்களுக்குத் தேவையான கலை நிகழ்ச்சிகளை நடாத்துவது எமது சமூகத்துக்குச் செய்யும் : பணியாய் அமையாதோ?!

ரசிகன்

## தன்னின வாழ்க்கைத்துணைச் சட்டம் தீர்மானம்

*ஆணை ஆணும், பெண்ணைப் பெண்ணும் வாழ்க்கைத் துணையாகக் கொள்ளலாம் என்ற சட்டத்தை நோர்வேயில் அமுல்ப் படுத்துவதற்கான தீர்மானம் எடுக்கப் பட்டுள்ளது. இந்தச் சட்டத்தின் கீழ் பதிவு செய்து கொண்ட துணைவியர்களுக்கு, அல்லது துணைவர்களுக்கு பொருளாதார, சட்ட சம்பந்தமான கடமைகள், மற்றும் உரிமைகள் விவாக சட்டத்தின் கீழ் பதிவு செய்து கொண்டவர்களைப் போன்று சம உரிமை உண்டென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆனால் இவர்கள் பிள்ளைகளைத் தத்தெடுக்கும் உரிமையும், ஆலயங்களில் விவாகம் செய்துகொள்ளும் உரிமையும் மறுக்கப் பட்டுளது.(?)இச்சட்ட அமுலாக்கலைப் பொறுத்தவரை நோர்வே உலகத்தில் இரண்டாவது இடத்தை வகிக்கிறது. நோர்வேயின் அயல் நாடான டென்மார்க் இச் சட்டத்தை முதன் முதலாக அமுலாக்கியதென்பது குறிப்பிடத்தக்கது.*

*–களவ்டன்–*

# தொழிலாளர் தினம்

## பேதுருவானவரின் ஆதங்கம்.



ம்.... அதொரு நல்ல சோக்கான காலம். இனிமேல் அந்தக் காலத்தப் புற்றி நினைச்சுப் பெரு மூச்சு விடத்தான் முடியுமே தவிர கனவிலயும் அது திரும்பக் கிடைகுமெண்டு நினைச்சும் பாக்கேலாது. இப்ப இருகிற சந்ததியும் அதுமாதிரி வாழ்க்கைய அனுபவிக்கக் குடுத்து வைக்கேல்ல. பாவங்கள். இப்பல்லாம் தொழிலாளர் நாளப் பற்றி ஏதோ சீமையி வியாக்கியானங்களெல்லாம் இப்பத்தையிப் பெடி பெட்டையள் சொல்லுதுகள். உதுகளப் பற்றியெல்லாம் முந்தி எங்களுக்கு ஒண்டுமே தெரிஞ்சிருக்கேல்ல. ஆனால் தொழிலாளர் நாளெண்டது எங்களுக்கானதெண்டது மட்டும்தான் எங்களுக்குத் தெரியும்.

கொண்டாடுவம். நல்ல சோக்காக் கொண்டாடுவம். கோயில் திரு விழாவவிட நல்ல சோக்காக் கொண்டாடுவம். குடும்பித் தம்பன்ர

றைக்டரப் பிடிச்சு, வயித்தியின்ர பெரிய சிறகுகட்டித் தோணிய அதில ஏத்தி, வடிவாச் சோடிச்சு, கடலுக்க தோணி ஓடுற மாதிரி நீல நிறத்தில அலயலயாக் கலரடிச்ச சிகரத்த றைக்டர மூடி கட்டி, பாறியின்ர தென்னந்தோப்புக்குள்ள நல்ல பாள தள்ளின தென்னயா வெட்டி, முழுசா நட்டு, தொளிலாளருக்குக் காவலாயிருக்கிற சூசயப்பற்ற பாட்டும் பாடிக் கொண்டு முதல் கடக் கரைக்கு ஊர்வலமாப் போவம். ஊரில வீடுகளில ஒரு குஞ்சு குருமானும் இருக்காது. எல்லாம் ஊர்வலத்துக்கு வந்திரும். நடக்கேலாத முடமும் எழும்பி ஊர்வலத்துக்கு வந்து, *பவனியயைப் பாரும், ரெட்சகர் வாற பவனியைப் பாரும்.* என்டு பாடிக்கொண்டு வருங்கள்.

இளஞ் சோழகக் காத்தின்ர வாசம் நல்ல சோக்காயிருக்கும். கடக்கரயிப் பெரிய பூவரசுக்குக் கீழ சூசயப்பற்ற சுருவத்த இறக்கி வைப்பம். மண்போட்டா மண் நிலத்தில விழாதபடிக்கு சனம் கடக்கர நிறைஞ்சு நிக்குங்கள். தோணி ஊர்வலத்தப் பாக்கிறதுக்காகவே வெளியூரிலயிருந்தெல்லாம் சனங்கள் வந்திருக்குங்கள். (ஊரில வடிவான பொம்பிளயண்டது கள்ள விதானயின்ர நடுவிலாந்தான். அதப் பாக்கிறதுக்கெண்டே இளமட்டங்கள் ஒருபக்கத்தால சுத்தித் திரியுங்கள். நானும்,சவேரியும் அந்தப் பொடிச்சிக்கு போட்டிபோட்டு கடல கச்சானும், மோதகம், வாய்ப்பனும் வாங்கிக் குடுத்த கத இன்னொரு சங்கதி.)

முதல் பூச நடக்கும். பூச முடிய தோணி ஊர்வலம். ஒம்பது, பத்து ஊரச் சுத்தி ஊர்வலம் வரும். கடசியா கோயிலடிக்கு வந்து சேர செக்கலாகிப் போடும். (இப்ப.... நாங்க பிறந்து வளந்த, தவண்டு விளையாடின அந்தக் கடக்கரப் பக்கமே போகேலாமக் கிடக்கு. இவன் அவனுக்கும், அவன் இவனுக்கும் மாறி மாறித் தாட்டுவச்சிருக்கிற கண்ணி வெடியள் எங்கெங்க இருக்கெண்டதே தெரியாமக் கிடக்கு. தொழில் துறைக்கே போகேலாத சீவியம்.)

தொழிலாளர் நாளப்பற்றி எங்களுக்குத் தெரிஞ்ச தார்ப்பரியமெல்லாம்: அது கடல்லயும், நிலத்திலயும், காத்திலயு, வேர்வ சிந்தி உழைக்கிற எங்களப்போல ஏழ எழியதுகளின்ர நாளெண்டது மட்டுந்தான். எங்கயோ ஒரு சீமயில நியாயங்கேட்ட

சனங்களின்ர லத்தம் தெருவில ஓடினதெல்லாம் எங்களுக்குத் தெரியாது. அத ஆரும் சொல்லியும் தரேல்ல.

உழைக்கிற ஒரு மனசனுக்கு ஓய்வு தேவ. அவன் பட்ட கஸ்டத்துக்குத் தகுந்த ஊதியம் தேவ. ஒரு மனுசன் கஸ்டப் படுகிறதுக்கும் அளவு கணக்கு வேணும். இந்தச் சங்கதியளக் கேட்ட ஏழச் சனங்களக் கொண்டது நியாயமில்லாத விசயம்தான். அதாலதான் இந்த நாள உலகமெல்லாம் கொண்டாடுதெண்டது. இப்ப சொல்லித்தான் நான் கேள்விப்படுறன். தங்கட லாபத்துக்காக இதயெல்லாம் எங்களுக்குத் தெரியாமல் மதம் போதிக்கிறவங்கள் மறைச்சு போட்டாங்களெண்டு இப்பத்தயிப் பெடியள் சொல்லுறாங்கள். அவங்கள் ஏன் மறைச்சாங்கள், எதுக்காக இதயெல்லாம் சொல்லித் தரேல்லயெண்டத ஒரு பக்கத்தால வச்சுப்போட்டு, இந்தத் தார்ப்பரியம்,வியாக்கியானமெல்லாம் தெரிஞ்சு வச்சிருக்கிற இளஞ் சமுதாயம் இந்தத் தொழிலாளர் நாள எதுக்காகக் கொண்டடுதுகள் எண்டு பாத்தா மனவருத்தமாத்தான் கிடக்கு.

பல்லுக்குப் பல்லு, லத்தத்துக்கு லத்தம், பழிக்குப் பழியெண்டு தங்களுக்க தாங்களே வெட்டுக் குத்து நடத்திக்கொண்டு, ஆரு அரசாளுறதெண்ட போட்டியில செத்து மடியுதுகள். எங்களக் கொடுமப் படுத்திறவன் ஆரண்டு கண்டு, அவனோட சண்ட பிடிக்கிறது நியாயம். ஆனா உதுகள்...?! அண்ணனத் தம்பியும், மாமன மருமகனும், சித்தப்பனப் பிள்ளயும் பழிவாங்கித் திரியுதுகள்.

ஆரோ கொஞ்சப்பேர்ர சுய நலத்துக்காக உதெல்லாம் நடக்குது. அதே ஆக்களின்ர தேவயளுக்காகத்தான், இந்தப் புனிதமான நாளயும் பயன்படுத்துதுகள். எப்பிடி இந்த நாள் வந்ததெண்டதத் தெரிஞ்சு வச்சுக்கொண்டு, ஏன் இப்பிடி சுய நலனுகளுக்காகக் கொடி பிடிக்குதுகள் எண்டதுதான் விளங்காத விசயமாக் கிடக்கு●


# மூவர்.

பல துண்டங்களாய்க் கத்தரிக்கப்பட்ட உலகம் என் முன்னால் சிதறிக் கிடந்தது. இன்று காலைதான் அப்பா இதனை வாங்கி வந்தார். துண்டு துண்டாகக் கிடக்கும் உலகத் துணிக்கைகளை சரியாகப் பொருத்தி முழுமைப் படுத்த வேண்டுமாம். அப்போதுதான் மாலை உணவில் குடும்பத்தாருடன் நானும் கலந்து கொள்ள முடியுமாம். பக்கத்தில் தங்கை எலன், முன்னால் அம்மாவும், அப்பாவும் மறு பக்கத்தில் பாட்டி இப்படி குடும்பத்தாருடன் உணவு வேளைகளில் பந்தி அமர்வதில்த்தான் எனக்கு அலாதிப் பிரியம். அதுவும் இன்று எனக்கு மிகவும் பிடித்தமான அரை வேக்காடான, வெண்ணெயிற் பொரித்த கோழி முட்டையும், ஆட்டு நெய் பூசப்பட்ட வெண் கோதுமை ரொட்டியும்.

இதுவரை முயற்சித்து கால்ப் பங்கு உலகத்தைத்தான் என்னால் பொருத்த முடிந்தது. எனக்கு நன்றாய்த் தெரியும் இந்த உலகப் படத்தைப் பொருத்தி முழுமைப் படுத்துவதென்பது எனக்கொன்றும் கடினமானதல்ல. இதைவிடக் கடினமான படங்களையெல்லாம் முன்பு பொருத்தியிருக்கிறேன். ஆனால் இன்று என்னால் முடியவில்லை.

முதலாம் வகுப்பிற் தொடங்கி இப்போ ஐந்தாம் வகுப்புவரை அவர்கள் இருவரும் என்னோடு ஒன்றாய்ப் படிக்கிறார்கள். இன்றுவரை அவர்கள் இருவரும் என்னோடு நல்ல நண்பர்களாய் உறவாடுகின்றனர். அவர்களுக்குள்ளும் ஒருவரை ஒருவர் ஸ்னேகமாய்த்தான் இருந்தார்கள். ஆனால்

இப்போ.... அண்மைக் காலமாக அவர்களது உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளதென்பது தெட்டத் தெளிவாய்த் தெரிகிறது. இப்போதெல்லாம் அவர்கள் இருவரும் ஒருவரோடொருவர் பேசிக் கொள்வதில்லை. அவர்களிருவரும் முன்புபோல் ஒருவரோடொருவர் பேசி உறவாட வேண்டுமென்று தமக்குள் தவிப்பது எனக்கு நன்றாகவே புரிகிறது. பல தடவைகள் இருவரையும் விசாரித்தேன் ''உங்களுக்குள் என்ன மனக்கசப்பு?'' என்று. ஆனால் அவர்களுக்குள் எதுவுமே பிரச்சனைகள் இல்லையாம். அவர்கள் இருவரது குடும்பத்தினரதும் கட்டளையாம் ஒருவரோடொருவர் உறவு வைத்துக் கொள்ளக் கூடாதென்பது.



சிவராஜ், நிஸார் இருவருமே இலங்கையைச் சேர்ந்தவர்கள். ஒரே மாகாணத்தை மட்டுமல்ல ஒரே ஊரில், ஒரே தெருவில் வசிப்பவர்கள். நிஸாரின் குடும்பமும், சிவராஜின் குடும்பமும் ஊரிலேயே நல்ல நட்பாய்ப் பழகி வந்தவர்களாம். பத்து வருடங்களுக்கு முன்னாலேயே நிஸாரின் தந்தை நோர்வேக்கு வந்துவிட்டார். அவர் இங்கு வந்த அடுத்த

வருடத்திலேயே சிவராஜின் தந்தைக்கு உதவி செய்து அவரையும் இங்கு அழைத்து விட்டார். முஸ்லிம், இந்து என்று இரு மதங்களைச் சேர்ந்தவர்களாய் இருப்பினும் ஒரே மொழியையே பேசிக் கொள்கிறார்கள். அவர்களது இரு குடும்பங்களும் இங்கு வந்த காலம் தொடக்கம் எமது குடும்பத்தாரோடு நல்லுறவாய்ச் சஞ்சரித்தார்கள்.

நிஸார், சிவராஜ் இருவரது குடும்பங்களின் நெருக்கமான உறவைக் கண்டு நான் ஆச்சரியப் படுவதுண்டு எமது அயலவர்கள் இப்படி ஸ்னேகமாய் இல்லையே என்று. நான் மட்டுமல்ல அப்பாவோடு காரியாலயத்தில் ஒன்றாகக் கடமையாற்றும் அண்டர்சனும் எங்கள் வீட்டிற்கு வந்திருக்கும் சமயங்களில் அவர்களிருவர் குடும்பத்தினரதும் ஒற்றுமையைப் பற்றிப் பல தடவைகள் புதினமாய்ப் பேசியதை நான் பல தடவைகள் கேட்டிருக்கிறேன். ஆனால் இப்போ அண்மைக் காலமாக சிவராஜ், நிஸார் குடும்பங்களிடையே ஏதோ ஓர் இனம் புரியாத, அல்லது என்னால் புரிந்து கொள்ள முடியாத விரிசல் ஒன்று ஏற்பட்டுள்ளதென்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது. அவர்களது குடும்பங்களிடையே ஏற்பட்டுள்ள மனக்கசப்பு என்னவென்று நிஸார், சிவராஜுக்கே தெரியாதெங்கின்றபோது எனக்குத் தெரிவதில் வாய்ப்புகள் எப்படி இருக்க முடியும்?.

ஒவ்வொரு தடவையும் எனது பிறந்த தினம் வரும் போதும், நத்தார், புது வருட தினங்களிலும் அவர்கள் இருவரும் பணம் சேர்த்து இருவர் சார்பிலும் ஒரு பரிசுப் பொருளை வாங்கித் தருவார்கள். ஆனால் இந்த வருடம் எனது பிறந்த தினத்திற்கும், நத்தாருக்கும் தனித் தனியாகவே அன்பளிப்புத் தந்தார்கள். ஏனோ எனக்குத் தெரியவில்லை அவற்றை ஏற்றுக் கொள்வதில் எனக்கு மிகவும் சங்கடமாய் இருந்தது. அவர்களை அவமதிக்கக் கூடாதே என்பதற்காக அவற்றைப் பெற்றுக் கொண்டேன்.

முன்பெல்லாம் நாங்கள் மூவரும்தான் ஒன்றாய்த் திரிவோம், விளையாடுவோம். ஆனால் இப்போ இருவருமே என்னிடம் முன்புபோல் வருவதில்லை. நிஸார் என்னிடம் வந்திருப்பானென்று சிவராஜும், சிவராஜ் என்னிடம் வந்திருப்பானென்று நிஸாரும் எண்ணிக் கொண்டு வருவதையே நிறுத்தி விட்டார்கள். உண்மையிலேயே நான் இப்போ மிகவும் கவலையாகத்தான் இருக்கிறேன். இவற்றை நினைத்து நான் துயரப் படுகிறேன் என்பதற்கு அப்பால், இப்போதெல்லாம் எனது சிந்தனை வேறெந்த விடையங்களிலும் லயிக்கவோ, கவனம் செலுத்தவோ, ஈடுபடவோ மறுக்கிறது.

இன்றைய மாலை உணவை குடும்பத்தாரோடு பந்தியமர்ந்து பகிர்ந்து கொள்ளும் வாய்ப்பை நிச்சயம் நான் இழந்து விடத்தான் போகிறேன்போல்த் தெரிகிறது. இருப்பினும் பாதி உலகத்தைப் பொருத்தி விட்டேன். இன்னும் பாதிதான் இருக்கிறது.

இடையில் அப்பா என்னை நோக்கி வந்தார். ''இன்று நீ தனியாகத்தான் மாலையுணவு அருந்தப் போகிறாய்...'' என்று கூறி விட்டு சாப்பாட்டு மேசைக்குப் போய் விட்டார். சாப்பாட்டு மேசையிலிருந்து தங்கை எலன் எழுப்பும் சந்தோசக் கூக்குரல் என்னை இருப்புக் கொள்ள முடியாமற் செய்தது. அப்பா மிகவும் கண்டிப்பானவர். எனக்கும், தங்கை எலனுக்கும் தேவையானளவு சுதந்திரம் தந்துள்ளார். ஆனால் எமது படிப்பைப் பொறுத்த வரை அக்கறையுடன் இருக்கும்படியான கண்டிப்புக்களை அவர் தளர்த்தவே மாட்டார்.

இன்று எப்படியும் உலகப் படத்தைப் பொருத்துவதென்ற தீர்மானத்தோடு எனது படம் பொருத்தும் முயற்சியைத் துரிதப் படுத்தத் தொடங்கினேன். எதிர் பாராத விதமாக

எனது முதுகை யாரோ வருடுவதை உணர்ந்து திரும்பினேனோ..., அப்பா கனிவான பார்வையோடு என் பக்கத்தே அமர்ந்து கொண்டார்.

''எலியாஸ்...! நீ மிகவும் புத்திசாலியென்பதை நானும், உன் அம்மாவும் அறிவோம். இந்த உலகப் படத்தை முழுமையாக்குவதென்பது உனக்குப் பெரிய விடையமேயல்ல. இருந்தும் நீ ஏன் இவ்வளவு நேரமாகியும் படத்தைப் பொருத்த முடியாமல் அவஸ்த்தைப் படுகிறாய் என்பதுதான் எனக்குப் புரியவில்லை. நீ எதையோ நினைத்துச் சங்கடப் படுகிறாய் என்பது மட்டும் புரிகிறது. நீ விரும்பினால் உனது சந்தேகம் எதுவாயிருப்பினும் கேள். தயங்காதே. முடிந்தவரை விளக்கம் தர முயற்சிக்கிறேன்.'' அப்பா இப்படிச் சொன்னதும் எனக்குச் சங்கடமாகவும், அதேவேளை எனது சங்கடம் தீரப் போகிறதென்ற சந்தோசமுமிருந்தது. சிவராஜ், நிஸாரைப் பற்றிய அண்மைக் காலப் போக்கைப்பற்றி அப்பாவிடம் சொன்னேன்.

''எலியாஸ்! இதனை நீ என்னிடமோ, உன் அம்மாவிடமோ முதலிலேயே கேட்டுத் தெரிந்து கொள்வதுதானே?! ஏன் தயங்கினாய்...? உனது நண்பர்களைப் பற்றி நீ அறிவதில் தவறில்லையே...?!''

அப்பா இப்படிச் சொன்னதும் எனது அறியாத் தனத்தை இரகசியமாகக் கடிந்து கொண்டேன். அப்பா தொடர்ந்தார்

''சிவராஜ், நிஸார் குடும்பத்தினரிடையே இப்போது உறவு சிறிது இடைவெளியாகத்தான் உள்ளது. அவர்கள் இரு குடும்பமும் முன்பு ஒரே குடும்பமாய் உறவாடினர் என்பது எவ்வளவு உண்மையோ அதேபோல் இப்போ அவர்களிடையே மனஸ்தாபம் வளர்ந்துள்ளது என்பதும் உண்மை. இவற்றைவிடப் பெரிய உண்மை என்னவெனில் இவர்களிரு குடும்பத்தினர்க்குள்ளும் யாரும் யாருக்கும் தனிப் பட்ட

வகையில் தவறு விடவில்லை.''

அப்பா சொல்வது பாதி விளங்கியும், பாதி விளங்காமலுமிருந்தது. தொடர்ந்தார் அப்பா.

''இலங்கையில் இருக்கும் தமிழ்ப் போராளிக் குழு ஒன்றில் சிவராஜின் சிறிய தந்தை அங்கம் வகிக்கிறாராம். அண்மைக் காலமாக அந்த இயக்கம் முஸ்லிம் மக்களுக்கு எதிரான செயல்களில் ஈடுபட்டுள்ளனர். இந்த வன்முறைகளால் நிஸாரின் குடும்பம் நிறையவே இழப்புக்களைச் சந்தித்து விட்டது. இலங்கையின் வடக்குப் பிரதேசத்திலுள்ள நிஸாரின் வீடு உட்பட நிஸாரின் உறவினர்கள் பலரின் வீடுகள், உடமைகள், போன்றவற்றையும் அந்த இயக்கம் பறிமுதல் செய்து, வடக்கை விட்டே அவர்களைத் துரத்தி விட்டனராம்...''

''அதற்கு ஏன் இத்தனை காலமாக ஒரே குடும்பமாகப் பழகி வந்த இவர்களின் இரு குடும்பங்களும் உறவுகளைத் துண்டித்துக் கொள்ள வேண்டும்...'' என்ற எனது கேள்வி எழ முன்னம் அப்பா தொடர்ந்தார்.

நிஸாரின் உறவினர் குடியிருந்த பகுதிகளில் அவர்களை வெளியேற்றும் பணியில் சிவராஜின் சிறிய தந்தைதான் தலைமை தாங்கிச் சென்றாராம். வெளியேற்றும் சம்பவங்கள் நடந்த காலப் பகுதியில் நிஸாரின் நெருங்கிய உறவினர் பலர் கொலை செய்யப் பட்டு விட்டனராம். ஆனாலும் இவர்கள் இரு குடும்பத்தினர்களுக்குள்ளும் மனஸ்தாபமென்பது தேவையற்றதும், தவிர்க்கப் படக் கூடியதுமாகும். இருந்தும் இவர்கள் இரு குடும்பத்தினரும் தவறான புரிந்து கொள்ளலால் தமக்கிடையே இருந்த அருமையான உறவுகளையும், ஸ்னேகங்களையும் துண்டாடியுள்ளனர். சொல்லப்போனால் இவர்களைப் போன்றோர் தேவையற்ற

தண்டனையை அனுபவிக்கிறார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். ஆமாம், யாரோ சில ஆயுத மனிதர்கள் செய்த குற்றங்களுக்காக ஒரே குடும்பமாய் உறவாடிவந்த இந்த அப்பாவி மக்கள் தண்டனையை அனுபவிக்கிறார்கள் என்பதுதான் உண்மை. முடிந்தவரை உனது பள்ளித் தோழர்கள் நிஸார், சிவா ஆகியோரை பகை உணர்வு தவிர்த்து உறவாட வைக்கும் பொறுப்பு உன்னைச் சார்ந்ததாய் உள்ளது. நிறைவேற்றுவாயா எலியாஸ்...?''

அப்பாவின் இந்த வேண்டுதல் என்னை ஆச்சரியப்பட வைக்கவில்லை. ஆனால் அவரது மனிதரை நேசிக்கும் மனப் பக்குவம் என்னைத் தாலாட்டியது. ''ஆமாம் அப்பா'' என்று அப்பாவின் வேண்டுதலுக்குப் பதிலிறுத்தேன்.

சிறிது நிமிடங்களிலெல்லாம் உலகப் படத்தைப் பொருத்திப் பூரணப் படுத்தி விட்டேன்.

நிஸார், சிவராஜ் ஆகியோரின் தேசமான இலங்கை, இந்தியாவின் கீழ்ப் பகுதியில் சிறிதாய்க் கிடந்தது. அந்தச் சின்னஞ் சிறிய தேசத்தை என் விரல்கள் எனது அனுமதிகூட இல்லாமல் விரைந்து சென்று வருடிக் கொண்டிருந்தன.

''அண்ணா ரொட்டி முழுவ தையும் நான் சாப்பிட்டு மு' டிக்கப் போகிறேன்...'' என்று சாப்பாட்டு மேசையிலிருந்தபடி தங்கை எலன் குரல் கொடுத்தாள்.

–தமயந்தி–

# ஆபாச நிகழ்ச்சிகளும்,எதிர்ப்பும்

கடந்த 31-03இல் ஸ்தவங்கர் நகரின் கலையரங்க மண்டபத்தில் அமெரிக்காவைச் சேர்ந்த சிப்பந்தாஸ் குழுவினரின் ஆபாச நிகழ்ச்சிகள் நடாத்தப் பட்டது. இன் நிகழ்ச்சி பெண்களின் பார்வைக்காக மட்டும் நடாத்தப் பட்டது. இருபது வயதுக்கும், நாற்பது வயதுக்கும் இடைப்பட்ட பெண்கள் (1000 பேர்வரை) இன் நிகழ்ச்சியைப் பார்ப்பதற்காக நுழைவுச் சீட்டுக்களைப் பெற்றிருந்தனர்.

இந்தக் கலை நிகழ்ச்சிகளில் உடற் பகுதியின் சின்னஞ் சிறிதளவு மட்டுமே உடையணிந்த ஆண்களும் பெண்களும் பாட்டுக்கள் பாடி நடனமாடினர். நிகழ்ச்சியின் உச்சக் கட்டத்தில் குழுவினரின் ஒரு பகுதியினர் அவர்களின் சிறிதளவு உடைகளையும் கிழித்தெடுத்து முழு நிர்வாணமாக்கினர்.

இந்த ஆபாச நிகழ்ச்சிகளை எதிர்த்து சில அமைப்புகள் ஆர்ப்பாட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டன. எதிர்ப்புக் குரலெழுப்பிய அமைப்புகளில் முக்கியமானது ''பெண்கள் அணி'' ஆகும். நிகழ்ச்சி தொடங்குவதற்கு முதல் நாள் ஸ்தவங்கரில் 500ற்கும் மேற்பட்ட இடங்களில் ''சுகவீனம் காரணமாக குறிப்பிட்ட நிகழ்ச்சி நிறுத்தப் பட்டுள்ளது'' என்று பொய்யான செய்திகளைத் தாங்கிய சுவரொட்டிகளை ஒட்டியுள்ளனர். இது தவிர, பத்திரிகைகளுக்கும் ஸ்தவங்கர் கலையரங்க நிர்வாகத்தின் கடிதக்காள் போன்ற தயார் செய்து அதில், நிகழ்ச்சி நிறுத்தப் பட்டுள்ளதாக செய்திகளும் வெளியிட்டுள்ளனர்.

இவ் எதிர்ப்பு நடவடிக்கைகளைத் தொடர்ந்து நுழைவுச் சீட்டு வாங்கியோரில் பாதிபேருக்கு மேல் நிகழ்ச்சியைப் பார்க்கச் செல்லவில்லை. மேற்படி எதிர் நடவடிக்கைகளில் ஈடுபட்ட பெண்கள் அணியின் தலைவி அஸ்த்தா பெயர்த்தா கோலாண்ட் தெரிவிக்கையில்:- ''இது ஓர் முற்று முழுதான ஆபாச நிகழ்ச்சி. இது தொடர்பாக பொலீசில் புகார் செய்துள்ளோம். இந்த நிகழ்ச்சிப் பொறுப்பாளருக்கு எதிராக வழக்குத் தொடரவுள்ளோம். குற்றவியல்ச் சட்டம் 211இன் பிரகாரம் இச் சட்ட மீறலில் ஈடு படுவோர் என நிரூபிக்கப் பட்டால் அவர்களுக்கு 2வருடம் சிறைத் தண்டனை வழங்க வாய்ப்புண்டு'' என்றார்.

-கருணா-

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும்
அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு.